10

உ



புலவர்கள் புகழ்பெற்ற

முத்தமிழ் க்ஷேத்திர மதுர

# பாஸ்கர தாஸவர்கள்

இயற்றிய புதிய பெரிய

## பக்திரஸகீர்த்தனங்கள்

இரண்டாம் பாகம்.

9281

...சாமிக்கோன்,
...ப்ளிஷர்,
...ப்பர்ஸ்டாம்பு மேக்கர்,
...மூலவீதி, மதுரை.
... 1930. [...ணா 5.

...ed Copy Right.

எக்ஸெல்ஸியர் பிரஸ், மதுரை.

வெளியாகிவிட்டது! வெளியாகிவிட்டது!

## மூக்கவேளாரவர்கள் நூதன வர்ணமெட்டு

### டிராமாச் சரித்திரங்கள் 12-ம் ஒரே புத்தகம்.

நண்பர்கள் வெகுநாளாக எதிர்பார்த்திருந்த புத்தகம்.

*முந்துங்கள்!* *புத்தகத்திற்கு* *முந்துங்கள்!!*

இராமாயணம், சூர்ப்பநகைபங்கம், வாலிமோக்ஷம், இலங்காதகனம், நல்லதங்காள் சரித்திரம், அல்லியாசாணி சரித்திரம், மயில்ராவணசரித்திரம், மதுரைவீரன்சரித்ரம், துரோபதைவஸ்திராபஹாரணம், கீசகசம்மாரம், புதியவர்ணமெட்டு பார்ஸி அரிச்சந்திரன், வள்ளியம்மை சரித்திரம் முதலிய அற்புத சரித்திரங்கள் 12-ம் *ஒன்று சேர்த்து, ஒரே புத்தகமாய்ப் பயிண்டுசெய்தது.* விலை ரூ. 1-8-0. *இப்போது ஆர்டர் கொடுக்கிறவர்களுக்கு* ரூ. 1.

விரகாலூர் மகா-ள-ள-ஸ்ரீ சுப்பையாபிள்ளையவர்களால் சரித்திரமுழுவதும் காவடிச்சிந்து திருப்புகழ் வர்ணமெட்டுகளால் வெகு சுவையாக இயற்றிய பாடல்கள் அடங்கிய

இராமாயணம், இலங்காதகனம், சத்தியவான் சாவித்திரி, கோவலன், நல்லதங்காள், அரிச்சந்திரன், ஞானசவுந்தரி, அல்லியாசாணி, பாரதம், பாகவதம், வள்ளியம்மை, சிறுத்தொண்டன், துரோபதைவஸ்திராபஹாரணம் *ஒவ்வொன்றின்* விலை அணா 2.

*சிவசுப்பிரமணியக் கடவுள் திருவருள் பெற்ற*

அருணகிரி நாதசுவாமிகளருளிச் செய்த

## திருப்புகழ் பெரிது.

*பக்தசிரோமணிகள் பலரும் விரும்பியவண்ணம் பல பழைய ஏட்டுப்பிரதிகளை ஆராய்ந்து, மதுரம் பழுத்துத் தேன்துளிக்கும் சந்தச்சுவை வாய்ந்து, படிப்பாருள்ளத்தையும், கேட்பாருள்ளத்தையும் பரவசப்படுத்திப் பேரானந்தப் பெருக்கிலாழ்த்தச்செய்யுஞ் சிறப்பு வாய்ந்த பாடல்களுடன் வெளியிட்ட சுத்தப்பதிப்பு.*

சந்தக்குழிப்பும் அரும்பதப்பொருளும் சேர்ந்துள்ளன.

(642) பாடல்கள் முதற்பாகம் 2—8—0
(614) ,, இரண்டாம் பாகம் 2—8—0

உ

வேலுமயிலுந்துணை.

புலவர்கள் புகழ்ப்பெற்ற

முத்தமிழ் க்ஷேத்ர மதுர

# பாஸ்கரதாஸ் அவர்கள்

இயற்றிய புதிய பெரிய

# பக்திரஸ கீர்த்தனங்கள்.

## இரண்டாம் பாகம்.

---

விருதுமாநகர், கோட்டைப்பட்டி ஜமீந்தார்

இரவிகுல திலக சீலஸ்ரீ ராமமூர்த்திநாயகர் அவர்கள்

விருப்பத்தின் பேரில்,

---

மதுரை வடக்காவணிமூல வீதி,

இ. ராமசாமிக் கோனால்,

மதுரை, எக்ஸெல்ஸியர் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை] 1930. [அணா-5.

*Registered Copy Right.*



# முகவுரை.

‘ஆயிரமுகத்தா னகன்றதாயினும் பாயிரமில்லது பனுவலன்றே’’ என்னுஞ் சூத்திரத்திற் கிணங்க, ஈண்டுச் சிறப்புப் பாயிரம் அவசியம் வேண்டற்பாலதாயிற்று. சகல பாஷையினுந் தலைமையுற்ற அமிழ்தினுமினிய நந்தமிழ்மொழிக்கு முதற்காரணமாயுள்ள ஓசையை அளவுபடுத்தி, வடிவிற் காட்டும் உருவுகளே எழுத்துக்களாய், அவை ‘முதலெழுத்து’ ‘சார்பெழுத்து’ என இரண்டு வகையாய்ப் பிரிந்து, தம்முள் முறையே ‘உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய் எழுத்து, ஆய்தஎழுத்து’ என நான்கு வகையில் ‘வல்லினம், ‘மெல்லினம், இடையினம் எனவும் பிரிந்து நின்றன, ‘‘உயிருமுடம்புமா முப்பது முதலே’’ என்றபடி பன்னிரண்டு உயிர் எழுத்துக்களுள் ‘அ’ என்னுங் குறில் பதினெட்டு மெய் எழுத்துக்களுள் வல்லின மெய்யுள் ஒன்றாய‘த்’இன்மீதேறி, ‘த’ என்று வந்து, உயிரின் இரண்டாவதாய ‘இ’ என்னுங் குறில் இரண்டாம் மெல்லினமெய்யுள் ஒன்றாய ‘ம்’ இன் மீதேறி, ‘மி’ என்று வந்து; உயிரின் மூன்றாவதாய ‘உ’என்னுங் குறில் மூன்றாம் இடையின மெய்யுள் ஒன்றாய ‘ழ்’ இன்மீதேறி. ‘ழு’ என்று வந்து, ‘தமிழு’ எனப்பெயர் பெற்றுப்பின்னர் ஈற்றெழுத்தின் உயிரோடி, ‘தமிழ், என வழங்கி, இப் பாஷையின் பெயரே இதன் சிறப்பையுங் காட்டி நின்றமையான் மீண்டும் இதனைச் சிறப்பிப்பது மிகை. இஃதியற்றமிழ்; இசைத்தமிழ், நாடகத்தமிழ் என விரிந்து இயற்றமிழ் என்பது * நடையையும், இசைத்தமிழ் என்பது ‘எழுத்து’சொல், பொருள், யாப்பு, அணி, என்ற ஐந்திலக்கண அமைதியாய் அமைக்கப்பெற்ற பலவகைச் செய்யுட்களையும், நாடகத்தமிழ் என்பது அவைகளுடன் பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற மூவித அமைதியாய்த் தாளத்தோடும், இராகத்தோடும்

---

*நடை-வசனகாவியம், தாளமின்றி இராகத்தோடு பாடப்பெறின், ‘செய்யுளினங்கள்’ இயற்றமிழின்பாற் படுமென்பாருமுளர்.

அமைக்கப் பெற்ற பலவகைத் துதிப்பாக்களையும் குறிப்பித்து, '**மூத்தமிழ்**' எனப் பெயர் பெற்று நின்றது. இப்பிரிவு மூன்றையும் பொதுவாய் 'இலக்கிய' மென்ப ராதலானும், "இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலின்" எனப் பவணந்தி முனிவரிசைத்தன ராதலானும் இலக்கியத்திற்கே இலக்கணமன்றி, இலக்கணத்திற் கிலக்கிய மன்றென்பது ஈண்டு யாவரும் ஐயமற் றுணர்தற் பாற்றும். இங்ஙனமாக நாடகத்தமிழ் மிகவும் இலேசான தமிழென்றும், அதற்கு எதுகை, மோனையைத் தவிர்த்து, வேறிலக்கணமின் றென்றும், இலக்கண முறையே முத்தமிழியற்ற வல்லரேனும் அவரை இழிவாய் "நாடகத்தமிழியற்றுபவர் ..ானே" என்றும் சிற்சில இராக, தாள உணர்ச்சியற்ற பண்டிதசிகாமணிகள் கருதி வருவது முற்றிலும் பிசகென்றே யாம் துணிந்து கூறுகின்றேம். "முத்தமிழினுந் தேர்ச்சியுற்ற ஒருவர் பல்லவி, அநுபல்லவி, சரணம் ஆகிய ஓர் துதிப்பா இயற்றுவதற்குள் அவரே ஐந்து வெண்பாவேனும், ஐந்து கலித்துறையேனும், பத்து ஆசிரியப்பாவேனும். அதற்கு மேலாம் அகவற்பாவேனும், இயற்றிவிடலாம்" என்பது முத்தமிழினும் பயிற்சியுற்ற மூதறிவாளரே நன்குணர்வர். ஆகவே சிறிதேனும் இலக்கண உணர்ச்சியற்றவர் எத்தமிழிலேனும் கவி இசைப்ப வல்லரல்ல ரென்பதே ஈண்டு திரண்ட பொருளாம். இனி நந் தமிழ்நாட்டில் தற்காலத்திய சிற்சில வித்வசிரோமணிகளால் "பத்திரஸ கீர்த்தனங்கள் என்றும், கீர்த்தனப்பாமாலை என்றும், தோத்திரப்பாமாலை என்றும் தோத்திரக் கீர்த்தனப்பாமாலை" என்றும் புதிது புதிதாய் வெளிவந்தனவற்றை ஒருவாறு யாம் கண்ணுற்றேம். அவைகள் தற்கால நாகரிகத்திற் கேற்றவாறு நூதன இந்துஸ்தான் வர்ணமெட்டுக்களில் கடவுள்மீது பக்திரஸம் பெருக மதுரமான செந்தமிழ்ப் பாக்களாய் அமையப்பெற் றிருப்பினும் ஒரு சிறிதேனும் இலக்

கண முறையைத் தழுவப்பெற் றிலேயே என யாம் மிகவும் வ்ச னிப்பதற் கிடமாயிருக்கிறது.

இவைநிற்கப்''பண்டைக்காலத்துப் புலவர்களுடைய பாட்டுக் களில் ஏதேனுங் குற்றமிருப்பின் அவர்கள் தண்டனையடைவ ரென்றும், இக்காலத்தில் அத்தகைய நிபந்தனைகள் இல்லாது போகவே, ழகர ளகர லகர ணகர னகர நகர ரகர றகர வித்தி யாசங்களைக் கூட அறிந்து கொள்ளாது கீர்த்தனம் பாடுதற்குத் துணிந்துவிட்டனர்'' என்றும் சிலர் குறைகூறு நின்றனர். அஃ துண்மையே. இருப்பினும், இத்தகையாரது பாட்டுக்களில் மேலே குறிப்பிட்டுள்ள குற்ற மொன்றுங் காணப்படவின்றெனினும் அ வழி வேற்றுமை, தொகைநிலை, தொகாநிலை, எச்சம், முற்று, இயல்பு விகாரம், உருபு, ஒழிபு, திரிபு முதலிய பொருத்தங்களுக்கு ம று பட்டதாகவே காணப்படுகின்றன. இதனால் சிறு மாணவர்களின் பாடத்திற்காகப் போப்பையரவர்களியற்றிய சிற்றிலக்கண நூ லுள்ள எழுத்தியல்பு மட்டுமே தெரிந்திருந்தால் ''இலக்கண வி யாகலாம்'' என்பது இவர்களது கருத்தா மென்று கருதுகிறேம. ஆயினுமென்?''ஈத்துண் ணார்செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும் பூத்தலிற் பூவாமை நன்று''என்றமுதமொழிக்கிணங்கக்'கல்ல ரே கல்லார்க்கிரங்குதலினும், அவர் இரங்காதிருத்தலே நன்றா மென பதை இத்தகையார் இனியேனும் நன்குணர்தற் பாற்றும்.

இவை நிற்க, சைவசமய குரவர்களாய நால்வர்களால் அரு ளிச் செய்யப்பெற்ற, தோத்திரப் பாக்களின் தொகுதிகளுக் த ' தேவாரம் என்றும், வைணவ சித்தாந்த ஆழ்வாராதியர் ... னிருவர்களால் அருளிச் செய்யப்பெற்ற, தோத்திரப் பாக்களி தொகுதிகளுக்குப் ''பிரபந்தம்'' என்றும் பெயரமைந்துள்ளன. கற்பிதபாசபந்தத்திற்கட்டுண்டுகிடக்கும் ஆன்மகோடிகள் கடை

தேறும் பொருட்டுப் பிர்ம சொரூபத்தால் அருளிச்செய்யப்பெற்ற ஆதியாம் வேதப் பொருள்களில் அடங்கியுள சைவ, வைணவ சாரங்களையே இவைகள் வெளிப்படுத்துவதால், இவைகளுக்குத் தமிழ்வேத மென்றும் பெயர் வாய்ந்துளது. இத்தகைய தேவாரத் தி ப்பதிகங்களுக்கும், பிரபந்தத் திருப்பதிகங்களுக்கும் பொது வாய்ப் பண் என்றும், இன்னின்ன 'இராகதாளம்' என்றும் ஆதியி லேயே அமையப்பெற் றிருக்கின்றன. 'பண்' என்பது ஈண்டு 'அமைதி' 'தகுதி' எனப் பொருள் பெற்று, இக்கலியுகக் கடையில் உலவப்படுகிற விபரீதவர்ணமெட்டுக்களில் அமைத்துப்பாடலினைப் படுதே பெரும்பவமென்பதையும் குறிப்பாகக் காட்டுகின்றது. ஸ்ரீமத் பாகவதம் உருக்குமாங்கதப் படலத்தில் "இன்று வருகிற ஏகாதசிவ்ரதத்தை யாம்ஒருசிறிதுமனுட்டிக்கத்தவறுதல்கூடாது"

"உருசீயோ டடிசீ லுண்ணோன் றுரைத்திடு பேதா யின்று
வருமரி விரதம் பேணு வமைதவ றிடுவ மாயின்
அருமறை நால்வர் வாக்கை ஆழ்வர்பன் னிருவர் வாக்கைத்
திருதபல் லிசையிற் பாடும் தீயர்க ணரகிற் சேர்வாம்"

என்று அரசன் தன் பிரிய பத்தினியாகிய மோகினிக்குச் சொல் லு தே இதற்குப் போதிய சான்றாகும். வேத மொழியின் பெரு மையறியாத சில பண்டிதமணிகள் "தேவாரம், திருவாசகம் முத லிய திருப்பாக்களையுங்கூடத் தற்காலத்துத் தில்லானு, இந்துஸ் தான், தேசிக ராகததிற் பாடலாம்" என்று முன்வந்து விட்டது "விபரீத கலியுகப்புதுமை" என்றே யாம் வியப்புறுகின்றேமாக. இனி இதை விரிப்பிற் பெருகுமாகவே இச்சிறு நூலிடந்தராவாம்.

நிற்க, புலவர்கள் புகழப்பெற்ற நமது முத்தமிழ்க்ஷேத்ரமதுர பாஸ்கரதாஸவர்களது பக்திரஸ கீர்த்தனங்கள் முதலாம், இரண்

டாம் பாசம் முதலியவற்றையும் யாம் கண்ணுற்றேம். இவை மதுரம் பொருந்திய செந்தமிழ்ப் பாக்களால் அமையப்பெற்றதோடு கடவுள் மீது உள்ளன்புடன் பஜிக்கத்தக்க பஜன பாராயண பக்தசிகாமணிகளுக்கு ஓர் அத்யாவசிய முத்தாரம்போன்று உள்ளமும், உணர்வும் உருகி, ஈஸ்வரனது திருத்தாளடிக்கே அன்புறுமாறு செய்விக்கும் ஓர் உன்னத சக்தியுடன் கலந்து, தேனெனத் தித்திக்கவுஞ் செய்கின்றன. சகல பாஷைகளினும் தமிழே 'இனிமை' வாய்ந்தது என நிரூபிப்பான் பொருட்டு, அப் பாஷையின் பெயரே 'தமிழ்' என வந்ததுபோல் தற்காலத் துலவிவரும் சகல தமிழ்க்கீர்த்தனப்பா மாலைகளினும் இவையே 'பக்தியைப் பெருக்குஞ் சிறப்பு வாய்ந்தவை' என நிரூபிப்பான் பொருட்டு, 'பக்திரஸகீர்த்தனங்கள்' என்றே பெயருற்று, கரும்பினின்றும் காய்ச்சி யெடுக்கப்பெற்ற ஓர் வஸ்துவுக்குப் பெயர் 'சர்க்கரை என்றும், குணம் 'தித்திப்பு' என்றும் முரண்படுவதுபோலல்லாமல் தமிழும், தமிழாலாய இஃதும் குணமும் பெயரும் ஒன்றாயது மிகவும் பாராட்டற்பாலதேயாம்.

இனி இவரினது துதிப்பாக்களின் பக்திநிலையை ஆய்வோமாயின் இவரும் ஒரு "அருள் வாக்கி" என்றே துணிந்து கூறலாம். ஆனால், செஞ்சடைக்கடவுளோ, திருவாதிமூலமோ, சிவசுப்ரமண்யமோ இவருக்கு அசரீரி தந்ததாய்க் காணப்படவில்லை. பின்னை என்னையோவெனில் இதுதான் 'விட்டகுறை தொட்டகுறை' என்பதாம். இவரது கீர்த்தனப்பாக்களினூடு ஒரோவழி எதுகை, மோனை, தாளம் மெட்டு முதலியவை நோக்கிக் குறில் நீண்டும், நெடில் குறுகியும், ஈறுகெட்டும், ஒருமைபன்மை, பாலிடவழுவிற்றழீஇய உலகவழக்கச் சொற்கள் அமைந்திருப்பது இலக்கண முறைக்குப் பொருத்தமன்றெனக் கற்றோர் கருதலாம். ஆயி

மென்றும், அவை இராகத்தோடு பாடப்பெறின் இசைத்தமிழென்றும், பல்லவி, அநுபல்லவி, சரண முதலியன நாடகத்தமிழென்றும் ஒரு சார்பார் கூறிப்போந்தனர். மாத்திரையளவிற் பாடுகின்ற எவ்வினமும் இயற்றமிழென்றும், அவை இராகத்தோடு கலந்துழி இசைத்தமிழென்றும், அவை காட்சியுடன் கலந்துழி நாடகத்தமிழென்றும் ஒரு சார்பார் கூறிப்போந்தனர். ஓசையின்றி இசையும் எழுத்தும் இல்லையால் இவை மூன்றும் பொருந்தாவென்ப. இனிப் *'பயில்பெறுவசனம் பனுவல்பல்லவி யாதிய வியலிசை நாடகமென்ப" வென்னுஞ் சூத்திரப்படி வசனகாவியம் இயற்றமிழென்றும், செய்யுட்பாக்கள் இசைத்தமிழென்றும், பல்லவி அநுபல்லவி சரணத்தோடமைந்த கீர்த்தனப்பாக்கள் முதலியன நாடகத்தமிழென்றும் தமிழை உருவகப்படுத்தி யுணர்வதே சிறப்புடைத்தாம்.

† பத்தாம்நூறும் புலவர் பற்பலது திப்பாக்கள்
எத்தாலி சைப்பினுமிங் கீடாமோ—வித்தாமெய்ப்
பத்தியின்ரா சத்தினிக்கப் பாமொழிந்த பாஸ்கரனர்
முத்தமிழ்ரா சத்தினுக்கு முன்.

இத்தகைய பக்திரஸத் துதிப்பா நூல்களையும், பிறவுமுரிமைப்படுத்தி, அச்சிட்டு வெளிப்படுத்துவதில் உன்னத முயற்சியெடுத்துவரும் எமது ஸ்ரீ இராமசாமிக் கோன் அவர்களுக்கு என்ஞான்றும் எம் கடமையைச் செலுத்தக் கடமைபூண்டுளேமாக.

இங்ஙனம்.

**நா. கிருஷ்ணசாமி நாயுடு,**
**தமிழ் வித்வான்,**
**மதுரை.**

---

* இலக்கண விளக்கப்பாட்டியல். † எத்தாலும்-கல்வித்திறமையினாலேனும், பக்திப் பெருக்கினாலேனும் அல்லது இவைவுள்ளன போல் ஏமாற்றுதலினாலேனும் எனப் பிரித்துப் பொருள் கொள்க.



முத்தமிழ் க்ஷேத்திர மதுர பாஸ்கரதாஸ்.

உ

வேலுமயிலுந்துணை.

முத்தமிழ்க்ஷேத்திர

மதுர

# பாஸ்கரதாஸவர்கள்

இயற்றிய புதிய பெரிய

## பக்திரஸ கீர்த்தனங்கள்.

இரண்டாம்பாகம்.

### சித்தி விநாயகத் தெய்வ வணக்கம்.

1. வெண்பா.

நத்திரஸ மாங்கனிக்கு நல்லருள்வைத் தாப்போலென்
பக்திரசக் கீர்த்தனைக்கும் பார்கடைக்கண்—அத்திமுகப்
பூபதியே விக்கினத்தைப் போக்கிப் புகழ்பெருகத்
தாபதியே முத்தமிழ்ச தா

2. சந்த விருத்தம்.

உம்பர்நா டதி பன்கெடா வித முன்புகா வன மோங்கவே
கும்பமா முனி செம்புநீர் கவிழ் சம்ப்ரமா சிவன் கோரியே

உத்தமி யானபொற் பூவாய்-நம்பினேன்
உண்மை யாய்க் காவாய் (முத்)
இரத்னமூக் குத்தி கொள்வாமி
என்னகத் தின்னிசை கேமி
பக்தியாய் நின்னேயிப் பூமி-பாடினேன்
பாஸ் கர சாமி (முத்)

---

## ஜீவாதாரச் சிவபெருமான் துதி.

### ஆசிரிய விருத்தம்.

அகரமுத லெழுத்தலா மானவா றுன்னையே
அன்றிவே றில்லை யென்ன
அறுபத்து நாலுதிரு விளையாட லுஞ்செய்
தனைத்துயிர்க் குயிரானவா
இகபரமி ரண்டிலுந் தாய்தந்தை குருதெய்வ
மென்னரிய சுற்ற முற்றாய்
இரவிமதி திசைமாறி னுமருள் மாறாத்
ஈசநின் பெருமை தன்னைப்
பகரவொரு நாவுதான் போதுமோ கேட்கவும்
பாரிலிரு செவி போதுமோ
பார்க்கவிரு கண்போது மோசதா கும்பிடப்
பாலனிரு கரம்போ துமோ

சிகரகோ புரவாயில் நான்மறை அறைகின்ற
திவ்யமுத் தமிழ் க்ஷேத்திரத்
திருவால வாய்ச்சொக்க லிங்கமே பாஸ்கரச்
சேவாத ரக்க டவுளே.

---

## 7. சொக்கலிங்கக் கடவுள் துதி.

நம்பினே னுன்னையே என்ற வர்ணமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சோம சுந்தரனே நின்
தூய தாளை சய வேளை (சோ)

அநுபல்லவி.

நாம மந்தி ரமெய்ப் போதம்
நம்பினு லதே பிரசாதம்
தாமதஞ் செய் யாத வீதம்
தந்தை போல்வந் தெந்த னுக்கருள் (சோ)

காம பாசக் கடலைத் தாண்டி
கர்த்தன் நின்னைக் காண வேண்டி
நேமமா யென் நெஞ்சைத் தூண்டி
நேரில் பேசப் பாருத் தேசம் (சோ)

மாம துரை ராணி தனே
வாம பாகம் வைத்த வனே
பூமனும் பாஸ்கர னுனைப்
பூவிற் பாடல் மேவுங் கூடல் (சோ)

அம்பலக் கூத்தன் ஆலவாயிற் புரிந்த அறுபத்துநான்கு
திருவிளையாடல் நிறைந்த

## 8. சந்த மகுட சாஹித்யம்.

இராகம்-பைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆடுவார் பொன் னம்பலத்தினில்
ஆண்டவன் பாஸ்கரன் வேண்டவும் தாண்டவம் (ஆ)

அத்தன் சுத்தன் கர்த்தன்
பத்தன் சித்தம் நத்த (ஆ)

அன்புங்கொண் டின் பங்கண்
டும்பர் தொண் டும்புரிந்திட (ஆ)

அரி கீதம் பலபாடச்
சரி வேதன் ஜதி போட (ஆ)

அந்த மிக்க நந்தி மத்த
ளங்தொ மிந்தி மென்ற டிக்க (ஆ)

ஆனை முகப்    பால னொடும்
ஞான குகச்    சீலனொடும்    (ஆ)

அரவாபர    ணமுந் துலங்கிடத்
திரவாதிசே    டனும் கலங்கிட    (ஆ)

ஆதியுமனாதியுமி    லாத ஜெக
ஜோதி நாரதாதி சுதிப்    ரீதியுடன்    (ஆ)

ஆடையுமத வாரணப்புலித்    தோலசைந்திட
வாடையின் திருநீறுகந் துடலே லிசைந்திட    (ஆ)

அனங்க னெனுமரு கனுமுன மணுகியே கணைமலர் தொடுத்திட
குணங்கி யவனுடல் கரிந்திட ஒருவிழி திறந்துட னெரிந்திட
வணங்கி யிரதியு மெதிரினி லருந்தவ மதுபல புரிந்திட
இணங்கி யவடனக் கருள்சுரந் தினிவத னுலகினி லருபியென்

றுரை செயுமரு    மறை புகழ் நம
திறைய வன்புலிக்    குறை யகலரின்    (ஆ)

அநுபல்லவி.

சூடுவார்    திங்களின்    கோலம்
தூய    நங்கை    பொங்கு    மாலம்
ஓடு    மான்    கபால    சூலம்
ஓங்கியே பாங்குடன் தாங்கியே நோங்கிட

ஊசலிடுங்    குண்டலமும்
மாசறுக    மண்டலமும்
ஆசையுறும்    விண்டலமும்
தேசயருந்    தண்டலமும்

உருகிட அணிமலர் மிசைமது
பெருகிட மணி ஒளி அசைவது
அருகிட வரு கதிர் பரியது
உன்ன தஞ்சேர் கன்னல்மொழி மாதுமையாள்
தன்னடனத் திற்குமேல் எனச்சரியாய்(ஆ)

சரணம்.

ஜெயம் பெறுந்திரு வாலவாய்ப் பதியிற்
சுயம்பு லிங்கமா யுதித்த நிதியாம்
நயம்பெறும்விண்ணவர்தினங்கெதியாய்
நாடிக்கொண்டாடிமுன் பாடியமதியாம்

செம்மலிந்த்ரன் பிர்ம்மஹத்தி யும்மகற்றிடும் மகேசன்
விம்முவெள்ளை யானை சாபந் தம்மை நீக்கிடும் ப்ரகாசன்
இம்மை வாணிபத்தனஞ் செயன் முனந் தெரிந்த வாசன்
தன்மகோத்ர சேகரன்தெய் வம்மெனச்செய்யும் மூலாசன்

சேமமிகுந்த தடாதகை யாகவே தேவி பிறந்திட
மாமலையத்வஜன் மும்முறை மாதவட்கே முடிதந்திட
வாமியுக்திக்கு விஜயப்பரி வார முடன் வலம் வந்திட
சாமியும் போரிடஓர் முகைதான் மறைவாக மணந்திட

சிதம்பரநட மறிந்துணவுகொள்
பதஞ்சலிமுனி அகம்மகிழ்ந்திட
இதம்பெறுமது ரையில்நடம்புரிந்
துடன் தகையன முனம்புகன்றிட

நிதம் பணிவொடு குடைபிடி தரன்
பசி தவிரென வனமுழுதிட

அதங்குறையெனச் சதுரனக்குழி
யுதி யெனவைகை நதிபெருகிட

நெஞ்சரனைத் தஞ்சமென்ற கஞ்சனைக்கு
அஞ்சலென்றெழுகடலழைத்தவனும்

கெஞ்சமலை ராஜனையழைத்து மூக்கிரன்
ஜெனனமாகவும் விளைத்தவனும்

வஞ்சமின்றியுக்ர குமாரன் ஜெயமாகிட
வேல்வளை செண்டளித்தவனும்

விஞ்சைக்குப் பொருளருளி மாணிக்கமும்
விற்றுக் கடல்வற்ற மேகம்விட்டவனும்

சேடனுலு மிக்க வியக்கச் சித்ரநாதன் மாட
கூடலாக்கிவர்ணன் பிணிதீர்த்தோன்

ஓடலான பார்ப்பிணிக்கு விருத்தகு
மாரபால ராகியே தன்னடி சேர்த்தோன்

செம்பதங்கொண் டன்பதாக மாறியாடியும்
பழியஞ்சும் பெருஞ் சந்தேகம் நீக்கி

வம்பன் வேதியன் பவமகற்றியேவீண்
டம்பன் சித்தனங்கம் வெட்டியாவிபோக்கி

துன்பஞ் செய்யவந்த நாகமாயப்பசு
வும்படவதைத்து மெய்காட்டிக் கண்ணோக்கி

வெம்பு குலபூடணற் குலவாக்கிழி
யுங் கொடுத்து வளையல்விற் றன்பராக்கித்

தேடுமாறு கன்னியர்க் கட்டமாசித்தி
வீடுரைத்து விடையிலச்சினையிட்டோன்

காடுவெட்டிச் சோழனோடு போர் புரிந்து
வாடுபாண்டியன் படைக்குதகம் விட்டோன்

நாடுபுகழ் சித்தனாகி ரசவாதஞ்செய்து
சோழனை மடிவில் வீழ்த்தி நட்டோன்

வாடுபத்தர்க் குலவாக் கோட்டையளித்து
மாமனாய் வழக்குரைத்து நீதி தொட்டோன்

திரமிகுந்திடு வரகுணற்குப் பரலோகமிங்குற
வழைத்தும்விறகு விற்றோன் திருமுகத்தோன்

வரகவிப் பத்திரனிருக்கப் பலகையிட்டுஞ்
சுரமிசை வாதறவேனத்துக் கழுதளித்தோன்

உரமிகுந்த பன்னிரு வேனத்தைமந்திரிகளாக்கியுங்
குருவிநாரைகளருள்பெறத் தன்னகர்வளைத்தோன்

சரமதை வங்கியனுக் கெய்தும் பலனை தந்துந்தரு
மிக்குப் பொற்கிழி யளித்துங்கீரனைத் தீய்த்தோன்

தீய்த்தவனைக் கரையேற்றி நற்றமிழ் சாற்றிச் சங்கமும்
போற்றவக் குறைமாற்றி இடைக்காடன் பாற்றுயர்ந்தவன்

வாய்த்திடும் வலைவீசியே திருவாதவூரடி
காத்துடன் நரிமாவெனச் செய்துமண்சுமந்தவன்

நோய்த்தணிந்திடப் பாண்டியன் சுரம்போக்கியுஞ்சம
ணர்த்திரள்கழுவேற்றி ஞானவனுயுயர்ந்தவன்
பூத்தவன்னிக் கிணற்றுடன் திருவார்த்தலிங்கமு
மாய்த்தலங்கிடப்பார்த்தநான் மறையாற் புகழ்ந்தவன்

சிறுவயதுறுமான் புலியமுதருந்தத்திருவாய்மொழிந்தான்
அறநெறிகுலசேகர னொருகாமே வளர்வரந் தந்தான்
உரிமையுடன் கையில் மூர்த்திக்கரசீய வந்தான்
நெறிவழிகாட்டக் காரியர் பாரியர்பாடு சிறந்தான்

தித்திக்கு முத்திக்கு வித்தெனும் பதத்திற்
சப்திக்குஞ் சதங்கை பக்தர்கோ திதத்தில் (ஆடு)

---

## 9. பிறையணி கூத்தன் பொருட்சாஹித்யம்.

நன்னபியாராரே என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஏகம்.

பல்லவி.

வெண்ணிலாச் சூடிய நாதா
நண்ணிக்கூத் தாடிய பாதா (வெ)

அநுபல்லவி.

மண்ணிலே பாசபந்த
மயக்கத்தி னல்மெலிந்தேன்
பண்ணிய பாவ மெதோ
பாது காத்தெப் போதுமே கண்பார் (வெ)

கன்னியோர் பாகமுறை
கடவுளுன் பாதமலர
சென்னிகொண் டாடவுரை
சேகரா கிர் பாகரா நிறை (வெ)

புண்ணிய கூடற்பதி
புகழ்பாஸ்கர னின்துதி
எண்ணியே பாடத்தகு
ஈசனே சொக்கேசனே கெதி (வெ)

## 10. சர்வலோகமாதா மீனும்பிகை துதி.

ஆசிரிய விருத்தம்.

பெற்றதாய் நீயுள்ள மட்டும் நான் செல்வக்கு
பேரமார்க்கண்டனுவேன்
பிறவிப் பெருங்கடலை நீந்திக்கரைகண்டு
பேரின்ப வீட்டில் வாழ்வேன்
பற்றதாய் தன்னையென் கனவிலும் நினைவிலும்
மறந்தென்றும் மதியனம்மா
மணப்பால் தனப்பா லருந்தாது மெஞ்ஞான
மானகுணப் பால் குடிப்பேன்
உற்றதா யெல்லாஉயிர்க்குமொரு தாயாக
உலகமா தாவு மாக
ஒரு தாயும் நின்போலி ருப்பதாக் கேட்டிலேன்
உறுதியுக முழுது முண்மை

கற்றதா நானெண்ணி விட்டதா நீயெண்ணிக்
கைவிடா தருள வேண்டும்
காட்சிநிறை மதுரையா சாட்சியுறை பாஸ்கர
காட்சிமீ னாட்சி யுமையே.

---

## 11. பாண்டியராஜ குமாரி பதந்துதி சாஹித்யம்.

புனர்கைஸி பகார்கைஸி என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாண்டிய னீன்ற மீனாட்சி உன் பாதம்
பணிவதே காட்சி (பா)

அநுபல்லவி.

ஆண்டியின் தேவியே மாட்சி மதுரை
ஆளர சாட்சி (பா)

தோகையரு.

பவசாக ரத்திலே பாலனை மூழ்கிடப்
பார்த்திருப் பதுவும் நன்றோ
நவரத்ன சிங்காச னியெனைக் கரையேற்ற
நாடியே வருவ தென்றோ

பல்லவித்தொடர்

நம்பினேன் அம்பிகை நீயே சேயனும்
வெம்பினேன் தாயே (பா

தொகையரு:

மகுடசம் மாரியே மரகதசொரூபியே
மாணிக்கமே செந்தேனே
விகடாதன் செந்தில் வேலனைப் பாலனாய்
விளையாடிக் கொஞ்சும் மானே

பல்லவித்தொடர்.

விரும்பினேன் பாஸ்கர சாமி செந்தமிழ்க்
கரும்பெனும் வாமி (பா)

---

## 12. மகுடாபிஷேக மதுராம்பிகா துதி.

எப்படி மனந்துணிந்ததோ சாமி என்ற வர்ணமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மதுரைக் கரசியான கண்மணி - மலைராஜன் பயின்ற
மாட்சிசேர் மீனாட்சி யம்மணி-வரம்பெற யுறைபணி (மது)

அநுபல்லவி.

சதுர் முகனொடு முனிவர் மதிக்கும்
தாயே தா மதுரையிலுதிக்கும்
பொதுநடமிடு மாலைத் துதிக்கும்
பூரணி காரணி சீரணி நாரணி (மது)

சரணம்-

இதுவரை பாரா முகமுமேனோ
ஏழைக்கிரங்கா விதமென்தானோ

கெதியென நம்பும் சிறுவன் நானே
கெஞ்சி நாளும் வாடிடுவேனே
பதியிலுன் புகழ் பாடிடேனே
பாஸ்கரசாமியைக்
காக்கின்றவாமியே (மது)

## 13. திக்குவிஜய ஒடாதகைத் துதி.

பஹாரியாலா தேக்கோ ஹாயிஞ்ச பன்மே என்ற மெட்டு.
பல்லவியில் பின்மகுடம்,
இராகம்-இந்துஸ்தான்பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

பாஸ்கரசாமி தினம் பணியும் சிவ காமி (பா)

அநுபல்லவி.

மார்க்கண்டனுக் கெமனெதிர் மகிழ்ந்துதித்த நேமி
மணம் பெறு மீனாம்பிகா சந்ததம் பூமி
துதி மாதா வாமி பதி வேதா மாமி
மத்தக மூஷிக வித்தகனைப்பயி
லுத்தமியேமயி லத்தனை நத்தும் (பா)

மலைமகளெனப்பிறந்த மாமதுரை ராணி
மாட்சியுடனஷ்டதிக்கர சாட்சி பேணி
ஜெய மாகல்யாணி உயர் வேலம் பூணி
மதித்துப் பரனை எதிர்த்துக்கணைக
ளுதிர்த்துச் சரணம் பதித்து நிற்கும் (பா)

தலைமைபெற் றருங் கொலுவில் தானமர் மீனாட்சி
தருக்திகம் புகுஞ் சுகந்தந் தருங் காட்சி
சர்வ லோக சாட்சி தெய்வ பாக சூட்சி
சந்தமணங் கமழ் செந்தமிழ்ச்சரபச்
சிந்துமலரணி இந்திரன் நந்த (பா)

## 14. மதுராம்பிகா துதி.

ஹாஜி ஹாஜி ஹாஜி பியாரி என்றமெட்டு.
இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

### பல்லவி.

மாமதுர வாசனி மரகத மீனலோசனி. (மா)

### அநுபல்லவி.

மாட்சி மீனாட்சியுண் காட்சி தாசிங் காசனி
மரகத மீன லோசனி (மா)

### சரணங்கள்.

காமதுரைமாமியே கங் காதரிநல் வாமியே
காவா முன் வாவா பரமேஸ்வரி சிவகாமியே
கரங்குவிக்குமிப்பூமியே (மா)

சோமதுரை பாரியே வளர் சுந்தரி கௌமாரியே
தோத்திரம் பாஸ்கர கீர்த்தனப்பா மாரியே
ஜொலித்திடும்லங்காரியே (மா)

## 15. மங்கள மகேஸ்வரி துதி.

போதா திருக்கூடற் பூமி நாதா என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-சாப்பு.

### கண்ணிகள்.

தாயே மகேஸ்வரி தஞ்சம் நீயே
சந்ததம் பாஸ்கர னுந்தன் சேயே
நாயே னெனக் குன் பதமீவாயே
நம்பினேன் னுன்பந்தீ ரம்பிகையே (தா)

மாயன் சகோதரிமா காரணி
மகிமை விளங்கும் பரி பூரணி
தூயசிவ சங்கரிவிண் தாரணி
தோன்ற முன்னின்ற சகநாரணி (தா)

அன்னையாருமைப் பிள்ளைபெற்றாலும்
அணைத்துக்கொஞ்சியன்பாய் பாலித்தல்போலும்
என்னையாட்கொண்டருள் வாவெக்காலும்
ஏற்றவே னேழைகாப் பாற்றுவாய்மேலும் (தா)

முன்னையான் செய்த பாவம் போக்குவாய்
முத்தி நெறி ஞானமுண் டாக்குவாய்
பொன்பெண் மண்ணாசையைநீக்குவாய்
புண்ணியம் பெறக் கடைக்கண்நோக்குவாய் (தா)

## 16. மகாவிஷ்ணு துதி.

ஆசிரிய விருத்தம்.

அலைகடலின் நடுவிலே சேஷசயனத்திலே
ஆனந்த மான தேவா
ஆதிநா ராயணநமோவென்று துதிபிரக
லாதனைக் காத்த மூவா
மலைகடலி லிட்டுமுன் கடையமுத முறவடியில்
வந்தகூர் மாவ தாரா
மச்சவுரு வாகியே மறைநான் கெடுத்தவா
வாமனு நேமி மாலே
கலைகடலி லுயர்வான கருணையின் கடலென்று
கைகூப்பி நின்று தொண்டன்
கண்ணுங் கருத்துமா வெண்ணினே னுந்தனைக்
காமரா ஜப்பி தாவே
நிலைகடலில் நில்லாத துரும்புபோ லலைகிறேன்
நீலமே கப்ர தாபா
நித்யலக் ஷ்மிவாச பக்தபாஸ் கரனேச
நேசகர்த் தாவு நீயே

---

## 17. ஸ்ரீமத் நாராயண பாராயணம்.

கோந்தாரு பூங்கணையால் மோகமாகினேனே என்ற
மெட்டில் பின்சந்த மகுடம்.

இராகம்-இந்துஸ்தான்தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஸ்ரீமந் நாராயணன் பதமே நம்பினு லின்பமே (ஸ்ரீ)

### அனுபல்லவி.

சீராப்தி நாதன் தெய்வப்ரசாதன்
திருமகள் வளர் மார்பன் சடகோபன் துதிபூபன் பத்மநாபன்

ஆதி சேஷ சயன தீரன்
உபதேச நயன வீரன்-சர்வ
தேவர்க்கதியுபகாரன் பூவில் திருவவதாரன்
திட்டக் கொடு துட்டக்கரு
வெட்டச் செய பட்டம் பெறு (நா)

இரண்யனுடல்வதைத்தோன் ராவணன்முடிசிதைத்தோன்
இகமதிற்ப்ரகலாதன் புகழ்வேதன் குணசீதன் பசுத்தாதன்

தந்தவனொறு வக்ர சிசுபாலன்
உயிர் தனைக்கவர் ஜெக ஜாலன் கமழ்
தேகத்தினி லுயர் சாமளன் நாகத்தினில் நடி கோமளன்
திண்ணைத்துடன் வெண்ணெய்த் தயி
ருண்ணப்ரிய கண்ணப்ரபு (நா)

தென்கூடற் சேத்ரன் தேவேந்த்ர கோத்ரன்
தினமும் பாஸ்கரசாமி புகழ்நாமி இப்பூமி பகர்நேமி

திருச் சேவை கண்டு கொண்டாடித்
தமிழ்ப் பாவை விண்டு முன்னாடிப்-பல
ஜென்மந்தனி லேசெய்திடுங் கன்மந்தனை யேநைதிடச்
செம்பொற் கழல் கும்பிட்டு
நலம் பற்று சுகம் பெற்றிட (நா)

### ரகுபதி ஆதி.

சாமி ஜெகஜோதியே என்ற மெட்டு.
இராகம்-பார்வதி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆதிரெகு நாதனே-மலர்ப்
பாதனே அருள் நீதனே (ஆதி)

அநுபல்லவி.

பாதனே அருள் நீதனே மலர்
வேதனே அருள் கீதனே (ஆதி)

சரணம்.

சோதி மிகு சாமளனே
சுகந்தரும் கோமளனே
தூயா நேயா சேயனுஞ்ச
காயம் புரியும் மாயவனே (ஆதி)

நீதிதவ ருதவனே
நிறைசீதா மாதவனே
நேமா கூர்மா வாமனனே-நின்
நாமம் பாஸ்கர ஞேதினனே (ஆதி)

---

## 19. திருவரங்கப் பெருமாள் ஆதி.

மாத்தாட பாரதேனே என்ற மெட்டில் பின் மகுடம்.

இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

செந்தாமரை மலர்ப்பாதா ஸ்ரீரெங்கநாதா (செ)

அநுபல்லவி.

சிந்தாகுலம் மிகுந்து சேவித்தே னருள்தாதா (செ)

சரணம்

தந்தை குரு தெய்வம் நீ தானே என்று யானெண்ணி
வந்தேனின் துதி பண்ணி வாகா எந்தனை நண்ணி
வரம ருளவா மலர டிகள்தா
ஹரிஹரி என்றொரு கரி முறையன்றிட
வாது ஏதுமி லாதுமேபுவி
மீதிலேயரு ளோது மாதவ (செ)

அன்னை ரங்கநாயகி தன்னோடமர்ந்தபோகி
உன்னைக்குணங்கொள்யோகி உலகம்புகழுந்தியாகி
உரமுடனேவரு மிரணியனுடலை
அரைநொடியிலறுத் திடவும் ரணமணி
ஓது சங்கொலி நாதமெங்கினு
மோதவுங் கழல் வேதன் முனிதொழும் (செ)

மதுராமுத்தமிழ்ப்பூமி மைந்தன் பாஸ்கரசாமி
எதிரிலுன்பதி நேமி ஏற்றி இங்கெனைச்சேமி
இரவு கபலு மென்னிருதய மதிலுன்
உறவு பெறக் கனவிலுமே மறகிலன்
இத்தரைக்கு வெடுத்த பொற்படி
வைத்துறக்க மிகுத்த தெப்படி (செ)

## 20, கோபால கிருஷ்ணன் துதி.

வெண்பா.

கோபால கிருஷ்ணன் கோமன் கொடையாளன்
மாபா லிருந்த மணித்தோளன்—பூபால்
அடைந்தோர்க் களந்தளிப்பன் ஆறு ளளவு
கடந்தளிப்பன் கற்றோர்க்கே காண்

நானுன்றனையாலே என்ற மெட்டு.
இராகம்-இந்துஸ்தான்பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

பூ-பாலர் மெச்சும் பூமான்
கோ-பால கிருஷ்ணக் கோமான் (பூ)

புலவர்க ளிருதய
மலர்விகு முதவும் (பூ)

பாத்திரமறிந்தன்ன மிடுவான்-ஞாயப்
பக்தருக்கே கட்டுப் படுவான் மாயக்

கோத்திரங்களை அடக் கிடுவான்-பல
கோடிலீலை புரிந் திடுவான் (பூ)

தொகையறு.

பட்சமாகக் கோகுலத்தை ரட்சித்த கண்ணன்
பாண்டவர் கொண்டாடிப்பாடும் பரிமள வண்ணன்

பாட்டு.

பங்கமிலாமது ரங்கமம் பாஸ்கர
மங்களகீதமு மூங்குசௌபாக்கிய (பூபா)

## 21. நான்மறை புகழும் திருமதுரை.

மான்மிய விருத்தம்.

கொஞ்சுதமிழ் பிறந்தவிட மென்றே நாளும்
குவலயத்தோர் கொண்டாடுங் கூடற்பூமி
அஞ்சுகமா மீனாட்சி சுந்தரேசர்
அறுபத்து நாலுவிளை யாடற்பூமி
தஞ்சமென அடைந்தோரை அன்பாய்க்காக்குந்
தருமகுண விற்பனர்கள் தழைக்கும்பூமி
செஞ்சொலுறை பாஸ்கரன்பா மாலைசூடும்
திருமதுரைப் பூமியிதே சிறந்தபூமி.

---

## 22. மதுரைத்தல மகிமைத்துதி.

சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமாகுமா.

என்ற மெட்டில் பின் சந்த மகுடம்.

இராகம்-இந்துஸ்தான் தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி

சதாதுதிக்க மதுரையைப்போல்
தலமும் வேறுண்டோ (சதா)

அநுபல்லவி

சாலோக சாமீப சாரூப சாயுட்சிய
தலமும் வேறுண்டோ (சதா)
சைவவை ராக்கியத்தில்
தெய்வத் தன்மை பெற்ற
தலமும் வேறுண்டோ (சதா)

சங்கமுன் னிருந்து வித்வ
மங்களம் பொருந்து தத்வ (தல)

சஞ்சலமுற்று வருந்திடில்
அஞ்சலி யென்று வரந் தரும் (தல)

சாதனைமாகன மாபுகழ்
மாதவ யோகிகளே திகழ் (தல)

சப்த சாகரத்தை யோரிடத்திலேயே
வைத்து நேரில் முத்தியே கொடுத்தருளும்! (தல)

சர்வேஸ்வரன் திருவிளையாட்
டறு பதினு லிறைகருணைத் (தல)

சரணம்.

நிதானயோக ஞானப்பூமி
நீடியே கொண்டாடும் வாமி
சுதாவெனும் பாஸ்கரசாமி
தோத்திர மாலையெனுந் தமிழ்க்
கீர்த்தன மேலு மணங்கமழ் (தல)
சதாதுதிக்க மதுரையைப்போல் (தல)

---

## 23. சற்குலகுருபரச் சண்முகக்கடவுள் துதி.

ஆசிரியம்.

திருமூர்த்தி யுங்கண்டு கொண்டாடு கின்றமெய்த்
தெய்வமே சைவஞானத்

தேசிகா சண்முகா கந்தாகு காமுருக
சிவசுப்ர மண்யசீலா

ஒருமூர்த்தி யாய்நின்று சூராதா ருகசிங்க
முக்ரமிகு சேனை தன்னை
ஓலமிட வேகொன்று வேலுயர் மயிற்சேவ
லும்பிடித் தேநடித்து
வருமூர்த்தி நின்னடிக் கன்புசெயு மிந்திரன்
மகளையு மணந்து கானில்
வள்ளியைக் கூடிவீ டாறினுங் குடியேறி
வாழுயிர னைத்து மேயாங்
குருமூர்த்தி என்னரிய குலமூர்த்தி யாகவாட்
கொண்டவா தொண்டர் தொண்டாக்
கூடல்வளர் பாஸ்கரன் பாடல்கமழ் கின்றமெய்க்
குணமுள்ள கடவுள் நீயே.

## 24. வேல் வணக்க விருத்தம்.

அன்னையும் பிதாவுந்தெய்வ மருந்தமிழ்க் குருவுமாகி
என்னையும் மௌனவம்சத் தின்பரம் பரையும் காத்து
நன்னயப் பெருமை செல்வம் நவில்சுகம் நாளுந் தந்தாள்
மன்னவன் சத்திவேலை வணங்குவ தெனக்கு வேலை.

## 25. மாரன் வாதையிலெல் என்ற வர்ணமெட்டு.

இராகம்-பைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வடி-வேலுமயிலுந்துணை தினம்
விரும்பும் பேரின்பக்
கரும்புந்தரும் பார் வடி (வே)

நாக-விட முடியடி தடமெனும் படி
திடமுடன் நடமிடு சுடர் வடி (வே)

வித்தசர சத்துருதமி
குத்தகொர்ம குத்துவம
தைத்தரைமி னுத்தமசி
ரத்ஜதமிலெ டுத்துரைவி
சித்திரகு றத்திபாக
நத்தியோக சத்திவடி (வே)

விளம்புமடியவரொடு மறையவ ரனுதின மிடு முறை செய்
உளம்படியவரு மிற சுர ருட னம ரரு மதி சன தன
இளம்பிறையுகரு மணங்கமழ் மலர்வகை பலவுமெ செறிநதி
வளம்பெருகுதிருப் பரங்கிரி யதி லரன் விழிவரு சரவண

அறுமுகனென வருகுகனுமை
திருமகனெனத் தருகாவடி (வே)

வே தா போ தா கி தா
விரை வொடு திரி
புரை கொடு வடி (வே)

வேணி தோணி ஏணி
பாணி பேணி பூணி
விஞ்சைச் செஞ்சொற்பரண
வஞ்சொற் கொஞ்சும் வடி (வே)

விண்டு வண்டு கண்டு
உண்டு தொண்டு கொண்டு

விந்தைச் சந்தச் சிந்தைக்
கந்தச் சொந்தப் பூ வடி (வே)
வேட்டம் கூட்டம் கோட்டம்
நாட்டம் ஒட்டம் பாட்டம்
வெருண்டு குறவர்கள் வரநொடி
மருண்டு மரவுருப் பெறும் வடி (வே)
விளங்கம் கிளங்கம் கயங்கம்
தளங்கண் டுளங்கம் பளங்கம்
,
விர்த்தங் கொண்டவள் கரம்பிடி
கர்த்தன் தொண்டரின் குருவடி (வே)
விகசிதமாக மிகமதியூக மகளதிவேக
தருமதுபாக சுகவிதமீக அகமிது தாக
விக்கலென்று பக்கமன்று
சொக்கரின் றணைக்கும்வடி (வே)
வெவியருஞ் சுனைக் கெவிவிழுமுனை
தனியவளொடுக் கவினயமொடு
புவியதில் கரி மிசைபயமென
நவில் வளி முனம் பயிரவி துதி வடி (வே)

அநுபல்லவி.

மூலப்பொருளெனு முதுகணநாத
மோதகனுக்கருஞ் சோதரநீத
சாலமறைசூழுஞ் சங்கரபோத
சாமளன்மருக தாமரைப்பாத

சாலோக சாமீப சாரூப
மேலோர்கள் சாயுச்யமாம்சுப
ஸ்ரீலோக சாதனை சூழ்தப
பூலோக தாதை பாற்காவடி (வே)

சரணம்.

எப்போதும் முற்பவக் கருப்பையில்மீடி
ஏதேதோ ஜென்மங்களைக் கூடி-தான்பி
றப்பதும்மண்மே லிறப்பதுங் கோடி
நாமறிந்தோ மிதற்குள் நாடி
சொற்பனங் கண்டுமறப்பதைப்போல்நேரும்
சுகமிதை நம்புவதோ யாரும்-இலை
செப்புவதற் கிடமில்லை இல்லை ஒரும்
சிதறுவா சிகளொன்றாய்ச் சேரும்

கற்பூர வாசப்பர கெதிக்கால் காட்டி
காமக்குரோத வேர்க்களை யோட்டி-பூதம்
நிற்பதி லந்தச் சுருதிச்சுடர் மூட்டி
நீங்காத சத்துச்சித்தானந்தங் காட்டி

முப்போதும் பொற்பதங் கைப்பொருதும் வாமி
முத்தமிழ்ச் சங்கமூகில் மதுரப்பூமி
கற்பக நீழல் வேந்தன் சந்ததிச் சேமி
கவிசரமழை முழங்கும் பாஸ்கர சாமி

கான சங்கீத காவலர் தேடும்
மோன லிங்கித மூவர் கொண்டாடும்

ஞானமாம் நாத நாவலர் பாடும்
தேனமர் பாத சேவலுஞ் சூடும்
கடிமணக் கடம்பணி தேசிகன்
அடி குணங்குடி துணி மாசுகன்
படி வணங்கிடு மணி மார்பகன்
நடிகன சிகியிட மேற்குகன்
நற்பரங்குன்றந் திருச் செந்தில் பழனி
செபபுவேரகப் பொருப் பினங்கழனி
முப்பழ முதிர் பெருஞ் சோலைக் குழனி
ஒப்புமுருகப்பன் கைப்பிடிபொன்வடி (வே)

26. அமாரநபிமேர என்ற வர்ணமெட்டு.
இராகம்-அமீர்கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

குமரனையே பாடிக் கொண்டாடுவோமே (கும)

அநுபல்லவி.

அமரர் சிறைதவிர்க்க அவதரித்த சண்முக
சமரில் சூரரை வென்ற சத்திவடிவேற்குக (கும)

தோஹையரு.

மயிலேறி விளையாடு குகனே எனத்தொண்டர்
வாழ்த்துமீராறு கையன்
குயில்காடை கிளிகூவு குளிர்சந்த மதுகண்டு
குன்றுதோறுடு மெய்யன்

பாட்டு.

ஜெயமோங்கும் பாண்டிப்பூமி சீலன் பாஸ்கரசாமி
செந்தமிழ்மாலையணி கந்தன்கார்த்திகை முத்துக் (கும)

## 27. இன்னும் வரக்காணேனடி என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

என்னை யாட்கொள்ளும் நாளுமென்றோ-சாமி
ஏழையானும் வாழையடி வாழை யூழியனன்றோ (என்)

அநுபல்லவி.

அன்னை தந்தைகுருதெய்வம் உன்னையல்லாலாருமுண்டோ
ஆறுமுகனேகைவிட்டால் ஆதாரஞ்சொல்வாருமுண்டோ
பொன்னை மாதரைப்பூமியைப் போற்றுவதிற் பேருமுண்டோ
புண்யனே லாவண்யனே காருண்யனே சுப்பிரமண்யனே(என்)

சரணம்.

சரவணையில் முன்போல் தான் விளையாடுகிறாயோ
தையல் வள்ளிதெய்வானை மையல்கொண்டாடுகிறாயோ
திரயிகுஞ்சூரமயில் சேவலைத்தேடுகிறாயோ
தெரியேனே உண்மை அறியேனே
சந்ததம் பாஸ்கரன் போற்று
கந்தனே காரணஞ் சாற்று (என்)

28. கழுகுமலைக்கு நாம் நேரே என்ற மெட்டு.
பல்லவியின் கீழ் அடுக்குச் சந்த மகுடம்.
இராகம்-பைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

நானுந் தொண்டன் குரு நாதா
நாளுமடியவர்க் கூழியன்மேல்வாதா (நா)

உனை-நம்பிக்கும் பிட்டேன் க
டம்பத்தானைத் தொட்டேன் (நா)

இந்-நானிலத்தஞ் ஞானம் நீக்கு
ஞான மார்க்க மீய நோக்கு (நா)

அயர்-நாடு சுற்றத் தோடு கட்டப்
பாடுபட்டுங் கேடுகேட்ட (நா

அ-நாதையென து வேதையகற்று
பாதையருள்வா தாதையிற்குற்று (நா)

பர-நாரியர் மையல் மீறு மிச்சைக்
காரியம்மதை வேரறச்செய் (நா)

புண்ய-நதியொடுதிருப் பதியறிகிலேன்
துதிசெயும் விதி யதுதெரிகிலேன் (நா)

பின்னை நந்திமனப் பத்திசேரு முத்தமரை
நித்தியம சித்திடவே புத்திகூறு (நா)

உந்தன்-நாமமந்திர மான தந்திர யோகசாதன
நேமமுந்தர மோனசுந்தர னேவிநோதனே (நா)

துள்ளி-நடிக்குஞ்சிகியிலமருங் குமரகுருபரனேவந்
தடிச்சுடி தெரிசன மெனக்கினித் தாமுருகனே (நா)

உன்னை-நாடியே கோரும் வரம் பெற
லாமென வேவரு மென்னிடம்
மோடி புரிந்திட லாகுமோ
சண்முக மாகிய தெய்வமே (நா)

அநுபல்லவி.

வீணை பொய்யுலகை விரும்புவேனோ
வீட்டின் வழிகாணக் காட்டில் வெம்புவேனோ
சாணுடலுக் கிரைதேடிக் கும்புவேனோ
சம்ஸார சாகரத்தில் ததும்புவேனோ

சண்டனுமிங்கணு காமலே
கண்டனஞ் செய்வது நின்கடன்
விண்டலருக் கருள் வேல்கரங்
கொண்டெதிர்நின் றிடவென்றிடும் (நா)

சரணம்.

நாவலரும் பூவலரும் ஆவலுடன் சேவைபெறும்
பூவடியே தேவையெனக் கூவுகிறேன் சேவலனே
பாவியெனும் பேர்படையா தேவுலகில்தேவர்மலர்
தூவியடி மேவுமயில் தாவிவருங் காவலனே

நஞ்சரவும் புலியும்புனை பிஞ்சகனின செவி மீதுயர்
விஞ்சையெனும்பிரணவம்புகல்கொஞ்சிதமின் கனிவாயனே
மிஞ்சியே பேசிய வேதனை முன்சிறை சேமதியே சூரின்
வஞ்சமனக் கருவேரறத் துஞ்செயமும் பெறுதூயனே

நலமுடனுன திணையடிகெதி
எனவுருகியே முனம்வருமொரு
மலைமுனி தனக் கினிதுடனருள்
மதிபெருங்கலை யுரைமுருகனே
பலவிதமினை வதைவிடும்படி
சொலவொருதுணை இலையுலகினில்
அலை கடல் தனி லிலக் குமியுட
னிலைதுயில் முர கரிமருகனே
நற்புனத்தி னிற்குறத்தி யற்புதவ
னப்பினைப் படத்துருவ மெய்ப்பிடித்து
வெற்பிலுன்னை நிர்ப்பிரம னற்புதல்வன்
செப்புமொழி யொப்புசிவ சுப்ரமண்யா
புட்ப மொய்த்த நற்சிரத்தி யான வள்ளி
நட்புபெற்றி டவுருப்ப லப்படைத்துங்
கற்பக வேழப் பெரும னப்பொழுதுன்
னைப்பழகிடப் பெணை மணநதகண்யா
நந்தியுமத்தள மந்தகாசத்தோடு
வந்து முழங்கிட
செந்திலுடன் பரங்குன்றமுந் தென்பழ
னிக்குள் விளங்கிட
முந்தியெழுந்து பணிந்திட சிந்தை நிறைந்த
ஒழுங்குடன்
இந்திரன் சந்ததிச் செந்தமிழ்ப் பாஸ்கரன்
சந்ததம் வழங்கிட

நாடியே உனது பாதமே கெதியாய்
பாடியே தினங்கொண் டாடுவேனப்பனே (நா)

29. தேக்கோ மேரி யாலா என்ற வர்ணமெட்டு.
இராகம்-அமீர்கல்யாணி-தாளம்-ஏகம்.

பல்லவி.

கார்த்திகேயக் கந்தா வடி வேலனே
கானவள்ளிமாது தெய்வானைதன் லோலனே (கா)

அநுபல்லவி.

காவலாஉனைத் துதி சேவகனெனைத் தநி
காவாசிவ னீன்ற பாலனே (கா)

சரணம்.

காரணநின் பாதமேகண் காண யானும் பாடினேன்
நாரணன் மருகனே மெஞ் ஞான மார்க்கந் தேடினேன்
பூரண வரம்பெற முன் போற்றியே கொண்டாடினேன்
வாரண முகத்தவன்பின் வந்தவா நான் வாடினேன்
காமனுக்கே மைத்துன பாரில் காவா
தாமதமே னுவுந்தன் சேவைதாவா
கர்த்தனே பாஸ்கரன்
பத்தியை நோக்கியுன்
முத்தமிழ் வாக்கருள்
கஞ்சமலர்த்தாளின் சீலனே (கா)

30. இங்நேரத்திலே என்னாலேயாகாது என்ற மெட்டு.

பல்லவி.

வேலாயுத முன்கையில் இருக்க
வேறுபய முண்டோ சண்முகனே (வே)

அநுபல்லவி.

கோலா கல வள்ளி தெய்வானையைக்
கூடி மயிலேறி யோடி வருவாயே (வே)

பல்லவி.

மாலாகிய கண்ணன் மருகனே
வாமியருள் மகனே முருகனே (வே)

அநுபல்லவி.

ஆலால விடத்தை அருந்திய
ஆதிசிவன் காதிலோதிய பேர்தனே (வே)

பல்லவி.

மேலாகிய நின்பாத பூஜையை
வேண்டித்தினம் பணிந்தேன் வித்தகனே (வே)

அநுபல்லவி.

சீலாமதுராபுரி பாஸ்கரன்
செந்தமிழ்ச் சீரணிவாய் முத்தாரனே (வே)

துரிதம்-தாளம்-ஆதி.

பேதகஞ் செயு மனக் குரங்கினை அடக்கியே
சாதகம் புரி கிறவழி அருள் குமரனே (நீ)

பல்லவியின் பிற்பாதி.

பித்தா னவன்சேயனே எங்கும்நிறை
கர்த்தா கார்த்திகேயனே (நீ)

அநுபல்லவி.

புள்ளிமயிலேலும் பூப்பாதந் தாதா
வள்ளி தெய்வானை மருவும் விநோதா
போற்றும் பாஸ்கர கீதா (நீ)

---

34. ஏமிமாயமு என்ற மெட்டில் பின் அடுக்குச் சந்தம்,
இராகம்-காம்போதி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தண்டபாணித் தெய்வமேநின் தாளினைக்கண்டேன்
சதமெனச்சிரங் கொண்டேன் (த)

அநுபல்லவி.

தொண்டரேவல் கொண்டுலாவும்
தோகைமயில் வாகா யோகா பழனித் (த)

சரணம்.

அண்டராணியாக நின்றுபணிந்திடத்
திண்டார் புயங்குவித் தேநீறணிந்திடப்
பண்டுவினையு மகன்று தணிந்திடப்

பந்தமறுத் துந்தனடி
சொந்தமெனச் சந்ததமும்
பரிமள மண முளதெரிசனம்
திருவுளகுண மிள கிடத் தினம்

பார்த்தவரும் பூர்த்திபெறும் க்ஷேத்திரத்தின்
நேர்த்தியதை ஏற்றிசித்தந் தோத்தரித்தேன் (த)

அநுசரணம்.

மூவுலகும் புகழும் உருவேஉனை நாடி நலம்பெறு
காவலருந் திகழுந்திரு வாவியி லாடி வலம் புரி
நாவலர் கூடிடு சேவடி ஆவலாய் மேவிடு காவடி

நற்கம்பத்திற் சங்கம்
பொற்கும்மத்திற் பொங்கும்

நத்திடச் சமைத்தமச்ச
மொத்திடக் குதித்துமெச்ச

நாவறுத்து வைத்தவர்க்குத்
தீவிரத்தினில் தழைக்கும்

நாட்டமறைத் தேட்டமதின் கூட்டமதைக்
கேட்டவரே தேட்டமுறைப் பாட்டமுதை

நாமகளும் புகழும்படி வேத முழங்கிடு வேளையில்
கோமகனின்குல மேவிய பாஸ்கர சாமி தினந்தொழும் (த)

திருமதுர பாஸ்கரனை
அருமையுடன் காப்பவனே (எ)

---

## 37. ஆசிரியம்.

பிரமனைச் சிறைதனி லடைத்தவன் செய்கையிற்
பேதமில் லாத படியே
பிரபஞ்ச மதனையுண் டாக்கவே உலகுளோர்
பேதித்துநின் றுவாடி
பிரமனைப் பிள்ளைகள் தன்பிள்ளை என்னவே
பேசியே கூச்ச லிடவும்
பிரணவப் பொருளினைத் தெரிவியென் றுனைமருவு
பிஞ்ஞகன் வேண்ட லாலே
பிரமனைத் திருவுள மிரங்கியே சிருட்டியைப்
பேணிநீ புரிவா யெனப்
பிரமன்வந் தடிதனைவ ணங்கவே அருள்செய்யும்
பேர்பெற்ற வடிவே லவா
வரமதைத் தந்தடிமை மனமதும கிழ்ந்திடவும்
மதுரபாஸ் கரனை யாளாய்
மகனேயு மைக்கினிய குகனேத வத்தர்தொழு
மயில்வாக னக்க டவுளே.

---

## 38. ஏழைமேலின்னும் வர்மமா என்ற மெட்டு.

இராகம்-நாட்டைக்குறிஞ்சி-தாளம்-ஆதி.

### பல்லவி.

நின் - பாலன்மேற் பகையாகுமா
பாதி மதியணி பசுபதி மகனே (பா)

### அநுபல்லவி.

வேலை சூழும் மேதினி தனில்
வேறு கெதி எவரினி
ஆறுமுகத் தெய்வமே (பா)

### சரணம்.

தா கருணை வர தா உனது மலர்த்
தாளிணைபணியத் தா னினைவதுச தா
மா வருணை பழ ஞ புரியில் வளர்
மகா யோக குகா அடியேன் தகாது செய்திடினும் (பா)

வா மயிலமர்சி வா வள்ளிமகிழ்ப
வா இன்னமுஞ்சொல்ல வா குஞ்சரி கண வா
மா மதுரமொழி பூ மன்பாஸ்கரன்
வாசத்தமிழ் நேசமிகுத்த ஈசனேமுரு கேசனேசிறு (பா)

---

காட்சிகண் காட்சியே என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

கண்டாலானந்தமே கந்தன் பாலாபிஷேகம் (க)

அநுபல்லவி.

தண்டாயுத பாணிதிருச் சந்நிதானத்தின்பெருமை (க)

சரணம்.

கொண்டாடுங் காவடிகள் கோடான கோடிலக்ஷம்
குமரா குகாவெனச்சங் கோதி முழங்கும்பக்ஷம்
பட்டாரக் கோஷ்டியின்சே கண்டி நாதமோமிச்சம்
பாவலரும் நாவலரும் காவியங் கூறச் சொச்சம்

பக்தஜன உத்தமரார்ப் பாட்டம் - தவ
சுத்தருடன் முத்தருமெ தேட்டம் - சிவ
சத்தமரகரா வென்னுங் கூட்டம் - அங்கு
நித்தமும் பரவுஞ் சுக நாட்டம்

பாவவினைக ளோட்டம்
தேவர்கள் யாக மூட்டம்
ஆவலுடன்மே லாட்டம்
அகில் கமழும் தேட்டம் - தனை (கண்)

சரவணப் பொய்கைதனில் தகுந்தீ ராடுவோரும்
சர்வஷிக் னேஸ்வரனைத் தான்துதி பாடுவோரும்
வரமுறப் பரங்கிரி வலமிட ஓடுவோரும்
வள்ளி தெய்வானை நாதன் மலரடி தேடுவோரும்

வற்புறுத்தும் கற்பூரத்தின் வாசம்-பெறும்
சுப்ரமண்யன் பொற்பதப்ர காசம் - காண
எப்பொழுதும் நற்பெருஞ்சந் தோஷம்-இந்த
அற்புதத்துக் கொப்புண்டோ விலாசம்

வாய்ந்திடுங் கை லாசம்
நேர்ந்திடு மிந் நேசம்
ஆய்ந்திடி லுல் லாசம்
அடைந்தால் மந்தகாசம்—என்றும் (கண்)

கோவில முருபார்க்கக் கூரிருகண்போ தாமோ
கூறவென் றுலகனைக் கோழையொருநா வாமோ
பூவிலரன் மாயவன் புகழிட மிணை யாமோ
புதுமையுடைய திரு மதிலும் கோபுரந் தாமோ

பொன்னுலகை உன்னிமொழி பேசும்-கோடி
மின்னிலவா வெண்ணவொழி வீசும் - தாவி
தன்னுரு வாதவ னையும் ஏசும் - படி
சொன்னமய மாயவன்கண் கூசும்

பொங்கிய கரகோஷம்
கங்கையாளுறும் பாசம்
சங்கினங் கள்வி சேஷம்
மங்களகீத கோஷம்—தனே (கண்)

அமரர் சிறைதவிர்க்க அவதரித்திட்ட வேலன்
அசுரர் குலமறுத்தே ஆடுமயூர சீலன்
சமரச அத்திகுறத் தையலிருவர் லோலன்
சாது சர்ச்சனருக்கே சந்தத மனுகூலன்

தங்கிய குன்று தோறு முதாரன் - மணம்
பொங்கிய கடம்பணி மயூரன் - சிவ
சங்கர னுதல்வரு குமாரன் - திருச்
செங்கரத்திற் சேவலணி வீரன்

சந்தமதுரப் பூமி
மைந்தன் பாஸ்கர சாமி
செந்தமிழ்த்துதி நாமி
வந்தவர்க்கருள் நேமி—பாதம் (கண்)

40 முத்துக்குமரையனே என்ற மெட்டு.

பல்லவி.

செந்தூர் முருகையனே
வந்தா தரி மெய்யனே-திருச் (செ)

அநுபல்லவி.

சுந்தரந்தெரிய மந்திரந்தனைமொ
ழிந்தகந்தநாதா தேவர்கணி
றைந்தசந்தவேதா நீதா (செ)

அந்தரத் தமா ருந்தவத்தினரும்
வந்துநத்தும்யோகா வள்ளிநையம
ணந்த அத்தி பாகா போகா (செ)

சிங்கன் தாருக னரங்கொள்சூரனுடல்
பங்கு செய்த வேலா கார்த்திகேய
மங்கைமாரின் பாலா சீலா (செ)

பங்கமற்ற மது ரங்கமழ் தமிழின்
சங்கவாச நேமி பாஸ்கரன்ப
தங்கள் பேசுவாமி சேமி (செ)

## 41. ஆசிரியம்.

சுரரூப திக்கினிய மனைவிமகன் மற்றுளோர்
சுகவாழ்வு தனையிழந்து

துன்பத்தி லாழ்ந்துமே அனவரத முந்தனைத்
தொழுதடி இறைஞ்சி யேங்கச்

சுரர்பகைஞ ராகின்ற சூரபத் மாதியைச்
சூழ்ந்துநவ வீர ருடனே

சொல்லரிய சத்திவேல் தன்னையே ஏந்தித்
துலைத்தசுர ரைச்செயித்துச்
சுரராஜ புத்திரன் சயந்தனைத் தலைதனைத்
துண்டித்து வரவ மைத்துச்
சுகமாக வெங்களு மேதந்தை அன்னையொடு
துணைவியொடு வாழ்ந்திடென்ன
வரமேய ளித்துதவு குமராமகிழ்ந்தினிய
மதுரபாஸ் கரனை யாளாய்
மகனேயு ம்மக்கினிய குகனேத வத்தர்தொழு
மயில்வாக னக்க டவுளே.

---

42. முத்தமிழ் வித்வ கல்யாணி என்ற மெட்டு.
இராகம்-அமீர்கல்யாணி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

காவடி சேர் விசாகனே தொண்டரைக்
காக்குந் தியாகனே
சேவடி தாவை போகனே கண்கண்ட
தெய்வம் நீதானே (கா)

மாவடி வேலைக்கொண்டோனே-முன்னந்தேன்
மாவை உண்டோனே
பூவடி மேனி கண்டோனே பூரிக்கப்
போதம் விண்டோனே (மா)

தேவசேனாபதி நீயே சூரைத்
தேடி வென்றாயே
கூவினேன் நானுமுன் சேயே கோபமேன்
கொண்டனைப் பாயே (தே)

மூவர்கொண் டாடுஞ்செந் தூரா சண்முக
மூர்த்தியே தீரா
சேவல்கொண் டாடுஞ் சிங்காரா மாமயிற்
சேவையே தாராய் (மூ)

பாவையாங் குஞ்சரி நேசா வள்ளியின்
பாக உல்லாசா
வாவிசூழ் குன்றுறைவாசா என் நெஞ்சில்
வாழ் முருகேசா (பா)

ஓவிய முத்தமிழ்ப் பூமி தேவேந்த்ர
ஒண் குலச் சேமி
பாவயர் சற்புத்ரநேமி பாடினேன்
பாஸ்கர சாமி (ஓ)

## 43. பழனியாண்டவர் துதி.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பழனியாண்டவனே உனதிரு
பதமலரினை அனுதினந்துதி
சதமெனு மகபதி குலத்துதி
பாஸ்கரசாமி தமிழ்க்கரு
ணைக்கி அளித்திடு மெய்த்திருப் (பழ)

அநுபல்லவி.

கழனியில் மது கசிந்துருகிடக்
கண்டவர்க்கருளென்றும் பெருகிடத்
தொழுநிறை இமையவ ருருகிடத்
தொண்டர்க் கருமருந் தெனவரு
மண்டர்க் கொருசுகந் தினந்தரு
தோகைமா மயிற்குகந்த
வாகனு புயத்தணிந்த
தோரண மான பதாயுத
வாரண ஞான வேலாயுத
சுத்தனே சித்தனே சர்த்தனே
நித்தமும் பத்தியாய் நத்தினேன் (பழ)

கோபுரத் தங்கத்தூவியும் வண்ணக்
கொடுங்கையுஞ் சிகரங்களும் விண்ணைச்
தாவியே துலங் கிடும்ஒளி மண்ணைத்

தான் விழித்திடச் சிறந்து
வான்பதிக்கு மேற் பொருந்து
கோவிற் றிரு வழகதையொரு
நாவிற் புகலவு மெளிதல
குன்றுந் தங்குஞ் சாவடி
என்றும் பொங்குங் காவடி

கோதிலாதவேதகீத மோதுபாதபோதநீதங்
கொண்டேன் கிரி கண்டேன் வர
முண்டேன் திருத் தண்டாயுதப் (பழ)

---

44. மனமோகன மானே என்ற வர்ணமெட்டு.

இராகம்-பிலஹரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வருவாய் மயிலேறி-எந்தன்
வருத்த மறுக்கத் துதித்தேன் தேறி (வரு)

அநுபல்லவி.

குருவா யரனுக் குபதே சத்தைக்
கூறியே வேதனைச் சீறிய போதனே

குறையறத் திருவரு மறைமொழி
தரவிலை எனச்சிறை அதிலறை

கோனே உந்தன்
நிறைமய மலரடி வரமது
பெறவடி யவனிடு முறையது
நீயறிந் திப்படிச் சும்
மாவிருந்திடிற் பொறுக்கேன் (வரு)

சரணம்.

இந்திரனைத் தொந்தரைசெய் துந்தவுண ருந்திரளாய்
வந்து சினந்து முனைந்து கரிந்து சரிந்து விழுந்துமடிந்திட அந்தரி தந்திடு செந்திரு வேலையெ றிந்திடு

செயகுஞ்சரி தனையன்பொடு
சுய மங்கள மணமும் பெறு
சேவற்கொடியணி மகபதி
யாவற்குமதிபதி இறுததி (வரு)

நாரதமாமுனிகூறிய காரிகையாள் தினைகாணவே
நாடி அலைந்தோடி முன்னம்
பாரதிலேகுற வேடுவனாக உருக்கொடு தேடியே

பார்த்து வஞ்சியை மணந்து
கோர்த்திடுங் கடம்பணிந்து
பரங்குன்றில் வாழ் முருகா
சரங்குன்று மால் மருகா

பங்கமிலா மதுரங்கமழ்
பொங்கிய பாஸ்கரன் முத்தமிழ்ப்
பாடலுக் குகந்துவெற்றி வேல்பி டித்துக்
கூடலம் பதிக்குள் நத்தியே நடித்து (வரு)

---

## 46. ஓரடிக்கீர்த்தனை.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

வேலவனே உனைநான் விடுவேனோ
வினைமுழுதையுமறுத் தெனையுனதடியவ
னெனஉலகினிற்பெரு நினைவுறச்செயும்வடி (வே)
விபர முங் கண் டின்பம் பொங்கும்
குமர தொண்டர்க் கன்புந் தங்கும் (வே)

அமர தொண்டன் பண்பின் சங்கம்
விமல நின்சொந் தங்கொண் டெங்கும்
விதிமறை வழி நடத்திடுவது சூட்சி
அதிசுகமதி லனுபவ முறை சாட்சி
மதிமிருந்திடு முயர் சுகநிறை காட்சி
பதியினிலிது தவறிடில் வருந் தாட்சி

பத்ம வாசனும்
நித்தமே துதி
சுத்த நேசனே
நத்தினேன் கதி

படபட வெனநட மிடுதிட மயில்மிசை
இடவல மிருமனை வியரொடு புவிமிசை
துடர்கண மதுதொழு திடவொரு நொடிதனில்
திடமுட னடியவ னிடம்வர வெனதடை
தெரிகிலனே சிறியவன் நான்
குறையது செய் தறிகிலேன் வடி (வே)

அநுபல்லவி.

சூல மேந்திய சிவ சுத னெனுஞ் சுப்ரமண்யா
தோத்திரஞ் செய்தேனருள் கார்த்திகேயனே புண்யா

துணிவுடனமரரு முனிவரு மயங்கிடத்
துயர் செயுமசுரரின் கருதிலை தயங்கிட
மணிமுடி யணிமலை மகளுமை யவளிடம்
மரகதவயிலடைந்தவர் குலம்விழஉடன்

மடித்துச் சிகியில்
நடித்துக் கொடியே
பிடித்துச் சமரை
முடித்திடும் வடி (வே)

சரணம்.

காலதூதர் பாசத்தால் கட்டியிழுக்கு முன்னே
கந்தா குகா சண்முகா வந்தா தரிப்பா யென்னை
பாலனு னுன்னையன்றிப் பணிதெய்வ முண்டோ சொன்னேன்
பாரில் தாய் தந்தைகுரு நீயே சுற்றமும் பின்னே

பக்தருட கூட்டுறவி
லுத்தம கோட்டநிலை
சுத்தஞானப் பாட்டருள் கொ
டுத்துமேபா ராட்டிடுவாய்

பரிமள மனமொடு செறிமலர் நிறைபரங்
கிரி தனிலுறை சரவணபவ அரகர
கரிமுக வரதனின் இளையவ குரு பர
அரிமரு கனின்தெரி சனமினி துறவர

அந்த மிகு மிந்திரனூர் சந்ததியில் வந்துதித்த
மைந்தனென பாஸ்கரனின் செந்தமிழ ணிந்தவடி (வே)

அடுக்கு மல்லிகை தோட்டுக்கு மெத்தையிலே என்ற மெட்டு.

49. இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

துடிக்கு மயிலில் நடிக்கும் புண்ணியனே
தொண்டர் கொண்டாடும்
தூய கார்த்தி கேயக் கண்ணியனே தினந்
தோறுமுந்தனைக் கோரும் வந்தனை
கூறு மென்தனைத் தேறும் சிந்தனைக்
குடி புகுந்திட விலையிது மலையா
குழந்தை என்மேற்
கொஞ்சமேனும் நெஞ்சிரங்கலையா (துடி)

படிக்குட் செகத்தை நொடிக்குட்சுற்றியவா
நாரதர் சொன்ன
பாவை வள்ளி ஆவல் பற்றியவா - அவள்
பாகமுமறை வாகவந்துசி
நேக முறுவி சாகசுந்தர
பரிமளமணங் கமழுஞ் சண்முகனே

என்னைத் தெய்வம்
பாரில் நீயே நேரில் வா குகனே (துடி)

மனத்தைக் கெடுக்கும் பரத்தைய ருறவே
என்னவியுள்ள
மட்டுமென்னைக் கிட்டிடாதறவே-திரு
மந்திர மொழி வந்திரு செவி
தந்திடத் ததி சந்ததனே ததி
மறை முதல்வனுக் குரை செய்யுங் குருவே
தேவாதி தேவர்
வணங்கு மிந்திரன் மகளணை மருவே (துடி)

சினத்தை விடுக்கும் வகைக் கொருமருந்தே
கண்டேனுன் பாத
சேவையென்றுந் தேவை நல்விருந்தே-நான்
தேடிப் பாஸ்கரன் பாடிய தமிழ்க்
கூடியானந்த மோடியம் பிடச்
சிரித்து மூவிரு முகத்துடன் வருவாய்
கண்ணாரக் காண்பேன்
ஜென்ம சாபல் யமதே தருவாய் (துடி)

## ஆசிரியம்.

தேவேந்தி ரன்தன்ன கத்தினிய மனைவியைத்
தேவரீ தந்தா யெனச்

சிந்தையது பூரித்து வந்துதன் புதல்வியைத்
தேவியா யாட்கொள் ளெனத்

தேவேந்தி ரன்தபசி லிருடிமுனி வோருடன்
தேகபர வசமா கியே

தென்பரங் குன்றினில் வந்தடிவ ணங்கவே
சித்தம திரங்கி யருளித்

தேவேந்தி ரன்செய்த வத்தாலு தித்தவொரு
செல்வியாந் திருவ மைந்த

தெய்வானை தன்னையே சேருமக் குன்றினில்
திருமணந் தான்பு னைந்து

வாவென்ற ழைத்துனது வாமத் தணைத்தவா
மதுரபாஸ்கரனை யாளாய்

மகனேயு மைக்கினிய குகனேத வத்தர்தொழு
மயில்வாக னக்க டவுளே.

48. ஐயா பழனிமலைவேலா என்ற மெட்டு.

இராகம்-சகானா தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கந்தா கழுகுமலை வாசா-திருக்
கார்த்திகை தீபப்பிர காசா-எனை
வந்தா தரிக்குமுரு கேசா-குற
வள்ளிதெய் வானையை மருவியநேசா (கந்)

இந்தாவெனஉன்னருள் தாராய்-தநி
ஏழையென் மனத்துயர் தீராய்-இனி
எந்தாயுந் தந்தையும்நீ பாராய்-மயி
லேறி யாறு தலை கூறிட நேராய் (கந்)

பந்தபாசமென்னுந் தூக்கம்-இனும்
படருமோ பலவித ஏக்கம்-என்
சொந்தந் தேடு மொரு நோக்கம்-கை
சோர்ந்திடாமலன்பு கூர்ந்திட லாக்கம் (கந்)

சந்தத்தமிழ் மதுர வேதா-சிவ
சைவ வைராக்கிய நாதா-உமை
மைந்தா பாஸ்கரசங் கீதா-திரு
மாலின்மருகா வடி வேலின் விநோதா (கந்)

## 49. பியாரி தோபனியா மிடாக்கதி என்ற மெட்டு.

### இராகம்-அமீர்கல்யாணி-தாளம்-ஆதி.

### பல்லவி.

வேறே கதி ஏது வேலவனே
மேதினியில் (வே)

### அநுபல்லவி.

நீறேயணி ஈசன் பாலனே
நீயல்லாது (வே)

### சரணம்.

தீராத வல் வினையைத்
தீர்க்குந் தெய்வ முநீயே
தேடிக் கொண்டாடி முன்னடியே
சிந்தனையே (வே)

ஆறு முகச் செல்வமே
ஆசைப் பூசை வில்வமே
ஆடும் பரி ஏறு மெய்யனே
முருகையனே (வே)

பாஸ் கரன் பாவு கந்தாய்
பைம்பொன் கடம்ப ணிந்தாய்
பாராமுகஞ் செய்யிற் பாவமே
சூழுமப்பா (வே).

50. தஸ்குமாரேது என்ற மெட்டில் பின் மகுடம்.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஏகம்.

பல்லவி.

மகா தேவாதி தேவ திருச் செந்தில் வாசனே (மகா)

அநுபல்லவி.

செந்தில் வாசனே அருள் மந்த காசனே (மகா)

சரணம்.

மூவாயிரம் பேர் நத்த முன்னோடித்தபித்தன்
சேயா நின்பாதம் நித்தம் சென்னி முடியும் பத்தன்
தீவினை தீராய் - வரந்
தாவியே தாராய் - பெருந்
திருவே பிறவிக் கருவே அறுக்கும்
மருவே துறவிக் குருவே சண்முக (தே)

வாவா மயிலில் ததி வள்ளி தெய்வானை துதி
சேவற் கொடி கைப்பதி தீரா குமரா கெதி
தேசிக வேலா - பர
ஞசுக மூலா - உனைச்
சிந்தை மகிழ்ந்து பணிந்திடு பாஸ்கரன்
செந்தமி ழுக்கருள் தந்திடுங் கந்தனே (தே)

சங்சற்பமே என்ற தியாகராஜ கீர்த்தனை மெட்டு.

இராகம்-பூர்வகல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

கந்தப்பனே கழுகாசலம வாழ் (கந்)

அநுபல்லவி.

கான வள்ளி தெய்வ கணவா எனையாள் (கந்)

சரணம்.

சொந்தப்பதந் தோத்திரஞ் செய்தேன்
சோமனுக் கோதிடும் பிரணவ சுதா (கந்)
அந்தரத் தேவர்கள் அனுதினம் போற்ற
ஆதரித் தருளும் ஆறுமாமுகா
பந்தவினை பாச மாயையை மாற்றப்
பக்தனும் பாஸ்கரன் பணியும் சண்முகா (கந்)

---

52. கலிலோ என்ற கீர்த்தனை மெட்டு.

ஸ்ரீ ராகம்-தாளம்-ஏகம்.

பல்லவி.

பழனுபுரி கிரியு றுறையுகுரு
பரனடி படிமனமே அறநினமே (பழ)

அநுபல்லவி.

பல நாள் புரி வினை யுனை விலகிடும்
படி குணங் குடி சனமே-பெருந்தனமே (பழ)

சரணம்.

பாழாகிய ஜடமதை எமன்வசப்
படுத்திட வரு முனமே
பகவானென் றேவணங்கியழை
பாச மூடா தினமே
சூழா மதுரித மணங் கமழ்பதி
சுகமுறப்பாஸ் கரனே துதிகுகனே (பாழ)

53. மருகேலரா என்ற கீர்த்தனை மெட்டு.

இராகம்-ஜெயந்தஸ்ரீ-தாளம்-ஆதி.

பல்லவி.

முருகா குகா ஸ்ரீசண்முகா (முரு)

அநுபல்லவி.

முருகா திருமால் மருகா சரணம்
அருகா வரமே பெருகத் தருணம் (முரு)

சரணம்.

வள்ளி தெய்வானை மருவும் விநோதா
புள்ளிமயிலேறும் புண்ணிய பொற்பாதா
தெள்ளிய முத்தமிழின் ஜெயந்த ஸ்ரீ சங்கீதா
வள்ளலே பாஸ்கர வடிவேல் கொள்தாதா (முரு)

தெள்ளுதமிழுக்குதவு சீலன் என்ற வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

கண்ணிகள்

திருமதுர பாஸ்கர சங்கீதா - வள்ளி
தெய்வகுஞ்சரிமகிழ்ச மேதா - என்றும்
தென்பரங்கிரியிலமர்ந் தன்பருக்கருள்புரியும்
போதா குரு நாதா

அருமறைப்பிரணவஞ்சொல் வோனே-தொண்டர்
ஆதியென ஓது முருகோனே-உயர்
ஆறுமுக மான குகா ஏறுமயிலே சண்முகா
நானே மற வேனே (திரு)

சூரரைச் சம்ஹாரஞ் செய்த வீரா சிவ
சுப்ரமண்ய கற்பக கெம்பீரா-ஜெக
ஜோதிப்பொற் சிலம்பணியும்பாதமேகெதியெனக்குத்
தாராய் துயர் தீராய்

பாரில் வள்ளியைமணர வந்தாய்-உனைப்
பாடுமருணகிரிக்கு கந்தாய் - மதுர
பாஸ்கரன் தமிழணிவாய் சாஸ்பதிலையருள்வாய்
எந்தாய் ஈன்ற தந்தாய் (திரு)

55 சேந்தின்மாநக ரந்தனில்மேவிய என்ற மெட்டில் பின் முடுகு சந்தம்.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

**கண்ணிகள்.**

கூடல்மாநக ரந்தனிலாடிய
குழகனருளிய பாலன்-தெய்வ
குஞ்சரி ரஞ்சித லோலன்-மலர்க்
குன்றுதோறு மகிழ்ந்திருந் தரு
ளென்றுமேதரு கின்ற பண்டிதன்
குறவர் குல இள சிறுமி தனை முனம்
திறமையுடன் மன முருகி டவுமினம்
கொண்டு காதலை விண்டுநற் கேகயம்
நின்று நடஞ்செய்த சீலன்-யார்க்கும்
நன்றுதவு மனு கூலன் (கூட)

ஈடில்லாவரந் தன்னையுட்கொண்டுவிண்
ஏகிச் சமர்புரி தீரன்-அந்த
ஈசனு மஞ்சிடுசூரன்-தன்னை
இட்டெ திர்த்து விடுத்த வேலது
பட்ட வன்குல முற்று மாளவே
இருடி முனிவர்பூ வருடிபொழியவு
மிமையோர்குடிபுகுந் திடவுமமரிடு
மெங்கண்மால் மகி ழுங்கண் மருகனும்
ஏற்றுங்கடம்பு மயூரன்-துயர்
மாற்றியருளு மொய்யாரன் (கூட)

ஆதியாகிய வேழமுகன் தனக்
காருயிர்த் தோழவிசாகன்-அன்பு
நேருயிர்க் கின்பசிநேகன்-முன்பு
அஞ்சவேகிர வுஞ்சமாமலை
கெஞ்சவே தூளைத் துஞ்சரிப்பட்ட
அரியகடல் வரண் டரியதுயில்விடு
பெரிய கடவுளர் நெறியிணிறையிடு
அப்பனாகிய சுப்ரமண்யஞ் நம்மை
எப்போதுங் காக்குந் தியாகன்-நல்ல
கற்பூர தீபப்ர வாகன் (கூட)
வேதமாமறை யோதிய பங்கயன்
வெட்சச்சிறை செய்த நீதன்-எந்தை
முக்கண்ணனார்க் குறை போதன்-ஜெக
மெங்கு மென்றும் விளங்கு மங்களந்
தங்கநின்று துலங்கு வேலவன்
இரவுபகலுமென் னிருதயமதனிற்
பரவுபகவனென் றினிய துதியினில்
எண்ணும் பாஸ்கர சாமிதமிழ்க்கருள்
எந்த நாளும் புரி கீதன்-தெய்வக்
கந்தனாம் பங்கயப் பாதன் (கூட)

---

56. தில்லை ஈசனைக் காண என்ற மெட்டு.

இராகம்-பைரவி-தாளம்-திரிபுடை.

பல்லவி.

திருப் பழனிமலையில் நிதம்-பக்தர்
பஜனை பாடுகிறார் (திரு)

அநுபல்லவி

நிஜமான தெய்வமிந் நீணில மீதிலே
நேரில்வரங் கொடுக்கும் ஆறுமுக நாதனை
பக்தர் பஜனை பாடுகிறார் (திரு)

சரணம்.

காலையு மாலையு மேலவர் வேதத்தைக்
கருதிடும் பாஸ்கர சாமிசங் கீதத்தைப்
பக்தர் பஜனை பாடுகிறார் (திரு)

---

57. தண்டபாணி சரண பூஜிதம்.

பல்லவி.

பாலாபிஷேகப் பழனிமலையப்பன்
பாதப்ர சாதம் பரமானந்தம் (பா)

அநுபல்லவி.

சாலோக சாமீப சாரூப சாயுட்சியம்
தந்திடக் கந்த னொருவன் சொந்தம் (பா)

தோஹையரு.

வேலா சுசீலாநற் கோலா கலாவா
நாலா கலா ஞான நூலீபவா

பாட்டு முடுகு.

விகசித நடமிடு மயிலுறைவாசன்
இகபர மிரண்டிலுஞ் சுகந்தருநேசன்

ஈசன் முருகேசன்
பேசும் பிரகாசன்
எங்கும் புகழாவி
னங்குடி யான் (பா)

தொகையறு.

சூரசம்ஹார ஒய்யார கெம்பீரன்
தீரவித் தாரமுத் தார சிங்காரன்

பாட்டு முடுகு.

துதிசெயு முதியவர்க் கதிகசிநேகன்
மதுரவளி குஞ்சரி மருவுவை போகன்
தோத்திரம் பாஸ்கரன்
கீர்த்தனப் பா கமழ்
தொண்டர்க்குத்தொண்
டனும் தண்டாயுதன் (பா)

58. பாலராமனையனே என்ற மெட்டு பின்முடுகு சந்தம்.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தந்தை-தாயுமான சுவாமியே
உந்தன்-தாளையடியே னெவ்
வேளையு மறவேன் (தா)
தமிழ்ச்-சந்தந் தங்குஞ்சிந்தை
எந்தன் சொந்தத் தந்தை (தா)
தவ - சாத னைக்கு கந்த நீத
போத பூத மென்ற நாத (தா)

வித்வ - தந்திக் கணபதி முருகனை
வந்தித் தருள்தர உதவிய (தா)
நல்ல - தாழையுஞ் செவ்வாழையும் பலாநிறைந்த
சோழனர சாளுந்தல மேலுறைந்த
பஞ்ச - தருவிரு கரையடர் விரிநதி
அருகுறு சிரகிரி வரை நிதி (தா)
என்றுந்-தானவர்க்குந் தேனிகர்த்த வானவர்க்கும்
ஞானவர்க்க மானசொர்க்க மோனமீயும் (தா)

அநுபல்லவி.

சேயுமுனை நம்பிப் போவேனோ மோசம்
செய்ய வென்றோ விதுவோ பரிகாசம்
நீயுமெனைக் கரை யேற்றுமுத்தேசம்
நெஞ்சினில் நினைத்தல் நன்று
வஞ்சனைப்ர பஞ்சசாலம் (தா)

பல்லவித்தொடர்.

தெய்வமுனைப்போலுண்டோ—சர்வ
ஜீவகோடியுங்கண் டாவல் கொண்டாடிய (தெ)

அநுபல்லவித்தொடர்.

சைவ சித்தாந்த சமரச மூர்த்தியே
சத்துச் சித்தானந்தத் தற்பர நேர்த்தியே
மெய்விளங்கும் புவி மீதிலுன் கீர்த்தியே
விண்டற்புத மிகவே புரி
தொண்டர்க் கெதிர் வரும் பூர்த்தியே (தா)

பல்லவித்தொடர்.

மையற் குரங்கால் கெட்டேன்—மங்கை
மாராட்டமானவெம் போராட்டத்திற்பட்டேன் (மை)

அநுபல்லவித்தொடர்.

உய்யும் வகைதெரி யேனிந்தப் பூமியில்
ஓதினேன் மதுர பாஸ்கர சாமியும்
செய்யுந் தமிழ்மதி செஞ்சடைநேமியுன்
சேவைக் கனுதினந் தேமினேன்
பாவைப் பரிமள வாமியின் (தா)

---

59 ஜெயராமமூர்த்திக்கிணையான என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சிவன் பால தண்டாயுத பாணி செந்தாமரைப்
பாதமே துணை (சிவ)

அநுபல்லவி.

நீல மயிலேறுங் கோலாகலவடி
வேலன் சந்நிதான நேர்த்தியே—துதி
ஞாலம் பரவிடுங் கீர்த்தியே—அநு
கூலம் பெறமனப் பூர்த்தியே (சிவ)

கோலவள்ளி தெய்வ குஞ்சரியாள் முத்தம்
கொஞ்சும் அறுமுகக் காட்சியே—அருள்
மிஞ்சும் பன்னிருகை மாட்சியே—தேவர்
தஞ்சம் அடைவது சாட்சியே (சிவ)

தித்திக்கு முத்தமிழ் க்ஷேத்திர மதுரச்
செந்தமிழ்ப் பாஸ்கர சாமியே—செப்பும்
சந்தப் பதங்கமழ் நேமியே—அவன்
சொந்தம் பழனியாம் பூமியே (சிவ)

## 60. இராமேஸ்வர மகத்துவ கோடி தீர்த்த சேது தெரிசனத் துதி.

வருகிறுனோ வாரானோ என்ற மெட்டின் பின் முடுகு.

இராகம்-சாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

சேது மாதவ ராம நாதனருள் விளங்கும்
தீர்த்தமாடியே பாவந் தீர்ப்பாமே—நாமே (சே)

அநுபல்லவி.

காதல் கவருடுதல் கள்ளுண்டல் பொய்மொழிதல்
ஈதல் மறுத்தல் மற்றும் எல்லா வினையும் போமே (சே)

சரணம்.

சாது சன்மார்க்க மதைச் சகலருமே நாடுவோம்
சம்சார சாகரத்தைத் தள்ளிச் சுகந் தேடுவோம்
போதுபோக்கவே புண்ய புராணங்களைப் பாடுவோம்
பொய்யான வாழ்வைவிட்டு மெய்வாழ்வைக் கையாடுவோம்
புரத்தைச் சிரித்தெரித்த பரத்தைக் குறித்து நித்தம்
சிரத்தையுடன் துதித்து வரத்தைப் பெறத்தருணமே (சே)

அன்னை தந்தை குருவை நன்னயமாய்ப் பணிவோம்
அநுதினம் பெரியோரின் பணிவிடைக்கே துணிவோம்
தன்னைப் புகழாதென்றும் தானே கொர்வந் தணிவோம்
தன்மம் புரிந்தே ஜென்ம சாபல்யப் பேரணிவோம்
சங்க மதுர முத்தமிழ் தங்கு பாஸ்கரன் நவிலும்
மங்கள முத்துவிஜய துங்கசிவலிங்கமே துணை (சே)

## சம்பூர்ண மங்களத் துதி சாஹித்யம்.

நீநாம ரூபமுலகு என்ற கீர்த்தனை வர்ணமெட்டு.

### பல்லவி.

மீனாட்சி சுந்தரன் சேய்
வேழ முகனுக்கும் மங்களம் (மீனா)

ஞானந் தந்துலங்க
ஞாலம் போற்றும் வேலனடிக்கும் (மீனா)

ஆதி மால் வேதன் வாணி
ஜோதிலக் ஷ்மியைப் பேணி (மீனா)

சாதுவரம் நாயன் மாரும்
சகல தேவர் மூவர் சேரும் (மீனா)

ஆஞ்சநேயர் ஆழ்வார் நம்பும்
அடியார் நேசந்தான் விரும்பும் (மீனா)

வாஞ்சையான பாஸ்கரன் பா
வழங்கும் பக்தி முழங்குஞ்சக்தி (மீனா)

### வாழிவிருத்தம்.

முழுமுதற் கடவுள் வாழி மூதவர் வாழிமேலும்
வழுவற அரசன்வாழி வையம்வா னுலகம் வாழி
தழுவுமுத் தமிழ்ப்பா வல்லர் தமக்கொரா தரவாமின்று
குழுவுகோ பாலகிருஷ்ணக் கோன்கொடை வாழிமாதோ

இரண்டாம்பாகம் முற்றிற்று.

---

மதுரைத் தமிழ்வித்வான்

ஸ்ரீ: நா கிருஷ்ணசாமி நாயுடவர்கள் எழுதிய

# சாவித்ரி சத்யவான்.

## ஓர் இனிய தமிழ் நாடகம்.

இதில் அமைந்துள்ள வர்ணமெட்டுகளின் இனிமையும், பாடலின் பெருமையும், வசன சாதுர்யங்களின் அருமையும் நவரச பூர்த்தியாகவே இருக்கும்.

| | | |
|---|---|---|
| 1, 2 பாகம் | விலை அணா | 0—4—0 |
| ஸ்ரீ கிருஷ்ணலீலா | ,, | 0—4—0 |
| நல்லதங்காள் சரித்திரம் 1, 2 பாகங்கள் | ,, | 0—4—0 |
| ஷை காந்தி தியானம் சிங்காரப்பாட்டுகளுடன். | | 0—1—0 |
| ஷை இராமாயணத் திருப்புகழ்காவடிச்சிந்து, | | 0—2—0 |

---

## முத்தமிழ் க்ஷேத்திர மதுர பாஸ்கரதாஸவர்களியற்றிய

| | | |
|---|---|---|
| இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம் 1, 2 பாகங்கள் | விலை அணா | 0—6—0 |
| புதியபெரிய பக்திரஸக் கீர்த்தனங்கள் | ,, | 0—5—0 |
| ஷை இரண்டாம் பாகம் | ,, | 0—5—0 |
| லலிதாங்கிசரித்திரம் ஷை யாரியற்றியது | ,, | 0—8—0 |
| வள்ளியம்மை சரித்திரம் ஷை | ,, | 0—6—0 |
| அதிரூப அமராவதி ஷை | ,, | 0—6—0 |
| சகுந்தலா 1, 2 பாகங்கள் ஷை | ,, | 0—8—0 |

## உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்களியற்றிய

| | | |
|---|---|---|
| இராமநாடகம் (படங்களுடன் | விலை ரூ | 2—0—0 |
| பக்திரஸக் கீர்த்தனங்கள் | | 0—5—0 |
| ஷை இரண்டாம்பாகம் | | 0—5—0 |

வந்து விட்டது! வந்து விட்டது!!

தமிழ் நாடெங்கும் புகழ்பெற்றுள்ள கன்னிச்சமீன் சரபம்

உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்களியற்றிய

# இராமாயண நவீன நாடகம்.

ஏழுகாண்டங்களும் சம்பூர்ணமாக அடங்கப்பெற்றுள்ளது.

முந்துங்கள்! புத்தகத்திற்கு முந்துங்கள்!!

இகபர சாதனங்களுக்கு இன்றியமையாததும், இஷ்டகாமியார்த்த சித்திபெறச் செய்வதும், நம்மவர்களின் ஆதி இதிகாச புராண காவியமானதும் ஆகிய இராமாயண காவியத்தை முற்காலத்துக் கவிவல்லோர்கள் பலவித காவியங்களாகச்செய்து உலகத்தை இன்புறச் செய்திருக்கிறார்கள். எனினும், அவை "தற்கால நாகரிகத்திற்கு அநுகூலமானவை அல்ல" என்பது நன்கறிந்ததே.

தற்காலம் நாடெங்கும் பரவி நடிக்கும் நாடகத்தார் முதலிய நண்பர் பலரும் விரும்பியவண்ணம் சிருங்காரம், வீரம், சோகம் என்ற ஒவ்வொரு பாகங்களின் சமயத்திற்கு ஏற்றவாறு இந்துஸ்தான், பார்ஸி, கெஜல், டோமரி, தில்லானா, டப்பா, திருப்புகழ் வண்ணம் முதலிய பற்பல அற்புத
பெற்ற பாடல்களாலும், படிப்பவர்க
நடைபெறுவது போலத் தோற்றும் நா
செந்தமிழ் வசனங்களாலும் மேற்கண்
சரபம், உடுமலை முத்துசாமிக் கவிராய
உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு,
ரப் படங்களால் அலங்கரிக்கச்செய்து,
தயாரித்திருக்கிறோம். புத்தகத்திற்கு மு

இ. மா. கோபாலகிரு

புத்தகவியாபா

மதுரை.